உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௧௧. Vol—XI.	காளயுக்தி-ஹூ பங்குனிமீ சித்தார்த்தி-ஹூ சித்திரைமீ APRIL, MAY, 1919.	பகுதி ௩—௪. No. 3—4.

ஸ்ரீ:

இந்தியாவின் கல்விநிலை.

புரொபஸர் ரேயின் அபிப்பிராயம்.

ரஸாயன சாஸ்திர பிரபல நிபுணரான புரொபஸர் பி. ஸி. ரே. என்பவர் சொல்கிறார்.

"தொழில் கமிஷன் பெரிய ரிபோர்ட் வெளிவந்து விட்டது. அதனது சாஸ்திரமுறையின் தன்மையைப்பற்றிப் பின்னர் ஆராய்ச்சி செய்வோம். ஆயினும் ரிபோர்ட்டில் சொல்லியிருப்பவைகட்கு நமது ...கதியம் எத்துணை பொருத்திருக்கின்றதென்பதையும் அதற்கு நாம் ஆயத்தர்கள்தாமா என்பதையும் இங்கு அவசியம் கவனிக்கவேண்டும்.

தொழிலபிவிருத்தி வெகு விரைவில் ஏற்பட்டு விடக்கூடிய தொன்றன்று. இந்தியாது அறிவின் செலவெல்லாம், தேச முன்னேற்றத்துக்கான வழியில் நடத்தப் பெறவில்லை. இப்படி ஆயிரக்கணக்கான வருஷங்களைக்கடத்திவிட்டார்கள். இத்தன்மையரைக் கொண்டு தான் நாம், தேச முன்னேற்றத்தில் அதிக முயற்சியான உணர்ச்சியையுடைய ஒரு தேசத்தினருடன் எதிர்த்து நிற்கவேண்டியிருக்கின்றது. இதற்கு முக்கிய ஆதாரம் கல்வியாகவே இருக்கின்றது. இந்தியாவில் தேசத்துக்கான கல்வியறிவு மிகக்குறைந்திருக்கின்றது.

இக்கல்விமுறையில் மற்ற தேசங்களுடன் இந்தியாவைக் கணித்துப்பார்ப்போமாயின், இதனைக் கல்வியபிவிர்த்தியை யடையாத தேசமொன்றென்றே சொல்ல நேரிடும். கீழே குறிக்கப்படும் அட்டவணையிலிருந்து மேலே சொன்னது நன்கு விளங்கும்.

இந்தியாவில் 100-க்கு 5–8 பேர்களே கல்வியறிவுள்ளவர்கள். பாலியர்களில் 100-க்கு 3–1 பேர்களே கல்வி பயின்று வருகின்றனர். 1915-ம் வருஷத்தில் ஜப்பானில் பாலியர்களில் 100-க்கு 98–80 பேர் படித்துவந்தனர். ஸ்திரீகளில் 100-க்கு 97–67 பேர் படித்துவந்தனர். மற்றத்தேசங்கட்கும் இந்தியாவுக்கும் கல்வி நிலைமையின் வித்தியாசம் பின்வரும் :—

[12-வயதுக்கு மேற்பட்டு எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்.]

நெம்பர்.	தேசம்.	1840	1870	1900
1	ஜர்மனி	18	4	1
2	நார்வே	...	3	1
3	சுவீடன்	20	3	1
4	சுவிட்ஜர்லாந்த்	20	5	1
5	நியூஸிலாந்த்	...	7	4
6	பிரான்ஸ்	53	15	5
7	யுனைடெட் கிங்டம்	41	10	6
8	ஆஸ்திரேலியா	...	...	9
9	ஹாலந்த்	30	14	10
10	யுனைடெட் ஸ்டேட்ஸ்	20	13	10

மேலே குறிக்கப்பெற்ற அட்டவணையால் இந்தியாவிற்கும் ஏனைய தேசங்கட்கும் உள்ள கல்வி வித்தியாஸம் நன்றாகத் தெரியலாகும்; இது கீழ்தரப்படிப்பின் நிலைமை. இனி உயர்தரப்படிப்பின் நிலைமையைக் கவனிப்போம். நமது தேசத்தில் உயர்தரக்கலாசாலைகளில் படிப்பவர்களின் தொகை 60,000. உயர்தரக்கலாசாலைகளில் 1916—1917-ம் வருஷங்களில செலவான மொத்தரூபாய் 71,03,748 இதில் அரசாங்கத்தார் 27,18,764 ரூபாய் உபகாரமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் 1916—1917-ம் வருஷங்களில் நமது தேசத்திலுள்ள யூனிவர்ஸிட்டிகட்குச் செலவு என்ன ஏற்பட்டிருக்கின்றதென்பதைப் பின் வருவதால் அறியலாகும்.

நெம்பர்.	யூனிவர்ஸிட்டி.	மொத்த வரும்படி.	அரசாங்கக் கிராண்டு.
1	கல்கத்தா	1887438	388385
2	பம்பாய்	396205	55000
3	சென்னை	512271	103000
4	பஞ்சாப்	394749	87850
5	அலகபாத்	317014	99400

இதனைத்தவிரத் தொழிற்படிப்பு அதாவது (மெகானிகல் இஞ்சினீரிங் படிப்பு) கற்பவர்களின் தொகையோ 1319 தான். இப்படிப்புக்காகக் கவர்மெண்டார் ரூபாய் 8,26,731 தான் செலவு செய்திருக்கின்றனர்.

இனி இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி இவற்றின் உயர்தரப் படிப்பின் நிலைமையையும் உயர்தரத்தொழிற் படிப்பைப் பெருக்கிவர அவைகள் செய்துவரும் ஏற்பாட்டின் நிலைமையையும் பற்றிக்கூறு

வோம். யுனைடெட் கிங்டத்தில் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து) அரசாங்கத்தார் உயர்தரப்படிப்புக்காகவும் வைத்திய படிப்புக்காகவும் தொழிற்படிப்புக்காகவுமாக வருஷம் ஒன்றுக்கு லக்ஷம் பவுன் கொடுத்து உபகாரம் செய்கிறார்கள். இங்கிலாந்து வேல்ஸுக்கும் மாத்திரம் மூன்று லக்ஷம் பவுன் கொடுக்கப்படுகின்றது. ஸ்காட்லாந்து தேசத்துக்கு 84,000 பவுனும் அயர்லாந்து தேசத்துக்கு ஒரு லக்ஷம் பவுனும் கொடுக்கப்படுகின்றன.

பிரிட்டிஷ் தீவுகளில் எல்லா யூனிவர்ஸிட்டிகளிலும் கல்விச்சாலைகளிலுமாக வருஷம் ஒன்றுக்கு 20 லக்ஷம் பவுன் வரும்படி கிடைக்கின்றது. யுனைடெட் ஸ்டேட்ஸில் (அமெரிக்காவில்) 200 லக்ஷ பவுன் வருஷ வரும்படியாக இருக்கின்றது. ஜர்மனியின் வருமானமானது 18 லக்ஷம் பவுனாகும். அமெரிக்காவில் தனியான யூனிவர்ஸிடிகள் சிலவற்றுக்கு ஏனைய எல்லாத் தேசங்களிலுமுள்ள யூனிவர்ஸிடிகளின் வருமானத்தைக்காட்டிலும் அதிகமாகக் கிடைக்கின்றது. அங்கு (அமெரிக்காவில்) கல்வியபிவிருத்திக்காக ஒவ்வொருவரும் அதிகமான பணவுதவி செய்துவருகின்றார்கள். பல்லோரது நன்கொடைப்பணமும் உயில் (Will) எழுதிவைத்த பணமுமாகக் கல்வியபிவிருத்திக்கு அதிகம் சேருகின்றது.

சில குறிப்புகள்.

1. இங்கிலாந்தின் ஜனத்தொகையையும் அமெரிக்காவின் ஜனத்தொகையையும் கணக்கிட்டுப் பார்ப்போமாயின், அமெரிக்காவில் கல்வியறிவு பெறுகின்றவர்களின் அளவு அதிகமாகவே காணப்படும்.

2. யுனைடெட் கிங்டத்தில் (இங்கிலாந்து ஸ்காட்லாந்து அயர்லாந்து) 5000 பேர்களே சாஸ்திர ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். ஜர்மனியில் 17000 பேர்களும் அமெரிக்காவில் 34000 பேர்களும் சாஸ்திர ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

3. அமெரிக்காவிலுள்ள (யுனைடெட் ஸ்டேட்ஸில்) யூனிவர்ஸிடிகளின் மொத்த வரும்படி 200 லக்ஷம் பவுன், ஜர்மனி 18

லக்ஷம் பவுனையும் யுனைடெட் கிங்டம் 20 லக்ஷம் பவுனையுமே வருஷ வரும்படியாகப் பெறுகின்றன.

4. ஜர்மன் யூனிவர்ஸிடிகளின் வரும்படியில் 100-க்கு 80 பாகம் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படுகின்றது. யுனைடெட் கிங்டமாகிய இங்கிலாந்து முதலிய மூன்றிலோ 100-க்கு 34 தான் பார்லிமெண்டால் கொடுக்கப்படுகின்றது.

5. யுனைடெட் ஸ்டேட்ஸ் யூனிவர்ஸிடிகளின் வருமானத்தில் 100-க்கு 30 பாகம் பிரபுக்களால் தனித்தனியே உபகரிக்கப் பெறுகின்றன. இங்கிலாந்தில் 100-க்கு 15 விதமும் வேல்ஸில் 100-க்கு 5 விதமுந்தான் அவ்வரும்படி கிடைக்கின்றது.

6. யுனைடெட் கிங்டத்தில் மாணவர்களிடமிருந்து சம்பளப் பணமாகப் பெறப்படும் தொகையானது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜர்மனி இவற்றினைக்காட்டிலும் அதிகமாகவே இருக்கின்றது.

7. யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள ஒன்பது யூனிவர்ஸிடிகட்குத் தனித்தனியே வரும் கவர்ன்மெண்ட் வருமானமானது யுனைடெட் கிங்டத்தில எல்லா யூனிவர்ஸிடிகட்கும் கவர்ன்மெண்டார் கொடுப்பதைக்காட்டிலும் அதிகமாகக் கிடைக்கின்றது.

8. யுனைடெட் ஸ்டேட்ஸில் யூனிவர்ஸிடிகட்கும் உயர்தரக் கல்விச்சாலைகட்குமாகப் பிரபுக்களால் கொடுத்துதவப்பெறும் தொகை வருஷம் ஒன்றுக்கு 550 லக்ஷம் பவுனுகக் கணிக்கப்பட்டிருக்கின்றது.

9. யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள தொழிற்கல்விச்சாலை வியவசாயக் கல்விச்சாலைகட்கு வருஷம் ஒன்றுக்கு 370 லக்ஷம்பவுன் வரும்படியாக வருகின்றது.

10. பர்லின் (ஜர்மனி) யூனிவர்ஸிடிக்குமட்டும் ஜர்மனி ராஜாங்கத்தாரால் உதவப்பெறும் தொகையானது, இங்கிலாந்து வேல்ஸ் இவற்றுக்குப் பார்லிமெண்டார் கொடுப்பதைவிட அதிகமாகவே இருக்கின்றது.

இதனால் ஜர்மனி யுனைடெட் ஸ்டேட்ஸ் யுனைடெட் கிங்டம் இவற்றின் உயர்தரக்கல்விநிலையின் வேற்றுமை நன்கு புலப்பட்டது. யுனைடெட் கிங்டத்தில் உயர்தரப்படிப்புள்ளவர்களின் தேவை யானது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜர்மனி இவற்றின் தேவையைக்காட்டிலும் அதிகமாகவே இருக்கின்றது. இந்த நிலைமை இப்பொழுது மாறி வருவதாகக் காணப்படுகின்றது.

சாஸ்திர ஆராய்ச்சி தொழில் ஆராய்ச்சி யிவற்றுக்காகத் [illegible] தனியான இலாகாக்களும் சங்கங்களும் ஏற்பட்டிருப்பதால் பயிற்சி பெற்றவர்களின் தேவை இன்னும் அதிகம் ஏற்படலாம். [illegible] பிரதேசங்களுடன் எதிர்த்துப் போராடும் திறமையை [illegible] கொள்ளும்போது பயிற்சி பெற்றவர்களின் தொகை அ[illegible] யாகவே இருக்கவேண்டும்.

மாணாக்கரிடமிருந்து வரும் சம்பளங்களைக் குறைப்ப[illegible] தேறியவர்களை யுபாத்தியாயர்களாக நியமனம்செய்து [illegible] கொடுப்பதற்காகவும் யூனிவர்ஸிடிகட்கும் கல்விச்சாலைகட்கும் அரசாங்கத்தார் அதிகப்பணம் கொடுத்து உதவவேண்டுவது அவசியமேயாகும். பார்லிமெண்ட் இப்போது அற்பமாகவே கொடுத்துதவுகின்றது. ஒரு நிபுணர் "எந்த வகையாரும் வாழ்வுக்குரிய வருமானத்தைப் பெறுவதற்கே இனி உலகில் கஷ்டம் ஏற்பட்டு விடும்" என்று ஊஹிக்கின்றனர். ஆகையினால் இந்தியராகிய நாம் எத்துறைகளிலும் மேலோங்கி வருவதற்காக வேண்டிய முயற்சிகளில் முற்பட்டு நிற்கவேண்டும். இனிமேலும் தாமதமாக இருத்தல்கூடாது.

இந்தியாகவர்ன்மெண்டார் வரவுசெலவு திட்டத்தில் கல்விவிஷயத்துக்காக ஒரு அற்பத்தொகையையே எடுத்து வைப்பதனால், ஜனங்கட்காகத் தாங்கள் செய்யவேண்டிய கடமையை அவர்கள் நன்கு உணரவில்லையென்று ஊஹிக்க இடமுண்டாகின்றது. இதற்காக, அரசாங்கத்தாரைமாத்திரம் குறைகூறாமலிருந்து நாமும் முற்படுவோமாக. யுத்தத்திற்காக இந்தியா 1450 லக்ஷம் பவுன் கொடுக்கவேண்டிய அவசியம் நேரிட்டிருப்பதனால், இப்போது பணத்திற்கு ஏற்பட்

டிருக்கும் கஷ்டமான நிலைமைகிர வெகுகாலம் பிடிக்கும்போலிருக்கின்றது. அது வரையில், அரசாங்கத்தார், கல்வி விஷயத்தில் அதிகப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டாரென்று கருதப்படுகின்றது. ஆகையால் கல்விப்பெருக்கத்தின் நிமித்தம் வேறு வழியையே தேட வேண்டும். மதஸ்தாபனங்களில் மிகுதியாயிருக்கும் தொகை இந்த நற்காரியத்திற்கு உபயோகமாதல் நன்மையாகும். இவ்வரும்படி கோடிக்கணக்காக இருக்கின்றதென்று கருதப்படுகின்றது. உபயோகமற்ற இக்காலத்துக்கு அவசியமல்லாத காரியங்களில் இத்தொகை வீணே செலவு செய்யப்பெறுகிறது. மதஸ்தாபனங்களைப் பற்றி, காலம் சென்றுவிட்ட அனந்தாசார்லுவும், ஸர் ராஷ் விஹாரி கோஷும் கொண்டுவந்த மசோதாக்களை நமது தலைவர்கள் நன்கு கவனியாதிருந்துவிட்டார்கள். மதஸ்தாபனங்கட்கே இந்த மசோதாக்களால் அனர்த்தம் விளைந்துவிட்டதென்று பல பத்திரிகைகள் கூறத்தொடங்கின. மதஸ்தாபனங்களில் அன்னியரான அரசாங்கத்தார் [illegible]ர்த்திக்கக்கூடாதென்பது நியாயம்தான். ஆனால், நாமே (மதத்தலைவரே) அந்த ஸ்தாபனங்களில் நுழைந்து அவற்றையும் சீர்திருத்திக் கல்விக்கும் அத்தனம் உதவுமாறு செய்யவேண்டுவதும் அவசியமேயாகும். அப்போது சிரமம் ஏற்பட நியாயமில்லையாகும். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கல்விக்காகப் பலர் நன்கொடையளித்து வருகின்றனர். இக்கல்வி விஷயத்தில் அரசாங்கத்தாரும் ஜனங்களும் ஒத்துழைக்கவேண்டும். தலைவர்களும் இதன் முன்னேற்றத்தில் அதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டும்.

பத்திராதிபர்.

ஜீவன்

இராமன் என்ற பையனுக்கும் அவன் உபாத்தியாயருக்கும் நடந்த சம்பாஷணை.

உபாத்தியாயர்—இராமா! மனிதர்களுக்கும் மற்ற பிராணிகளுக்கும் பொதுவான விஷயங்கள் யாவை?

இராமன்—உண்ணுதல், உறங்குதல், தன் இனத்தை விர்த்தி செய்தல், ஸந்தோஷம், துக்கம், கோபம் இவைகளை அடைதல்.

உபாத்தியாயர்—மற்ற பிராணிகளிடமிருந்து மனிதனை வித்தியாசப் படுத்துவதுயாது?

இராமன்—மனிதனுக்கு "இது நல்லது இது கெட்டது" என்று பகுத்தறியும் தன்மையுண்டு. மிருகங்களுக்கு அப்படியில்லை

உபாத்தியாயர்—இது தவிர வேறு ஏதாவதுண்டா?

இராமன்—எனக்குத் தெரியவில்லை. தாங்கள்தான் சொல்லவேணும்.

உபாத்தியாயர்—மனிதன் கீழ்பார்வையுடன் மேல்பார்வையும் உடையவன். அதாவது இவ்வுலகம் தவிர வேறு உலகங்கள் இருப்பதாகவும் தெரிந்துகொள்ளச் சக்தியுள்ளவன். ஈஸ்வரனை அடையவும் சக்தியுள்ளவன்.

இராமன்—இவ்வுலகம் தவிர வேறு உலகங்கள் என்று சொன்னீர்களே! அவைகள் யாவை?

உபாத்தியாயர்—மேலுலகங்கள் ஏழு. கீழுலகங்கள் ஏழு. ஆகப்பதினான்கு உலகங்களுள்ளன. ஆனால் சாதாரணமாக மனிதன் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்ற மூன்று உலகங்களில் மாறி மாறிச் சஞ்சரிப்பவன். அவனை மூவுலக சஞ்சாரியென்று சொல்வதுண்டு.

இராமன்—மற்ற உலகங்கள் யாவை?

உபாத்தியாயர்—மற்ற உலகங்களைப்பற்றிப் பிந்தி நீ தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது சொன்னால் உன் மனம் கலக்கும்.

இராமன்—ஈஸ்வரன் எங்கே இருக்கிறார்?

உபாத்தியாயர்—எள்ளு, கடலை, கொட்டைமுத்து இவைகளிலிருந்து முக்கியமாய் என்ன கிடைக்கிறது?

இராமன்—எண்ணெய் கிடைக்கிறது.

உபாத்தியாயர்—இவைகளில் ஒவ்வொன்றிலும் எந்தப்பாகத்தில் எண்ணெய் இருக்கிறது? எந்தப் பாகத்தில் எண்ணெய் இல்லையென்று சொல்லமுடியுமா?

இராமன்—சொல்லமுடியாது. எல்லாப்பாகத்திலும்தான் எண்ணெய் இருக்கிறது.

உபாத்தியாயர்—அவ்விதமே இந்தப்பிரபஞ்சத்தில் ஈசுவரன் இல்லாத இடம் கிடையாது. எங்குமிருக்கிறார். பிரகலாதன் சரித்திரம் நீ கேட்டதில்லையா?

இராமன்—கேட்டிருக்கிறேன்.

உபா.—அதைச்சொல்.

இராமன்—முன்னொரு காலத்தில் ஹிரண்யகசிபு என்றொரு அசுரன் இருந்தான். அவனுக்கும் அவன் குமாரனான பிரகலாதனுக்கும் ஈசுவரன் விஷயமாகச் சம்வாதம்வரப் பிரகலாதன் ஈசுவரன் தூணிலும், துரும்பிலும் எங்குமிருப்பதாகச் சொன்னான், "அப்படியா" என்று ஹிரண்யகசிபு கோபங்கொண்டு பக்கத்திலிருந்த தூணைக்காட்டி "இதிலிருப்பாரா? காட்டுவாயா"? என்று சொல்லி அதைக்காலாலுதைக்க ஈசுவரன் தூணிலிருந்து நரஸிம்மமூர்த்தியாக வெளிவந்ததாகக் கேட்டிருக்கிறேன்.

உபா—துரும்பிலும் ஈசுவரன் சக்தி இருக்கிறதென்பதற்கு ஒருகதை சொல்லுவாயா?

இராமன்—எனக்குத்தெரியாது. தாங்களே சொல்லவேண்டும், ஐயா?

உபா.—பூர்வகாலத்தில் அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் ஒரு சமயம் சண்டை நேரிட, தேவர்கள் வெற்றியடைந்தார்கள். ஆனால் தாங்கள்தான் ஜெயித்து விட்டோமென்று மதிமயங்கி "அவன் (ஈசுவரன்) அன்றி அணுவும் அசையாது" என்ற பழமொழியை மறந்து கர்வம் அடைந்திருந்தார்கள். ஈசுவரன் இவர்களுக்குப் புத்தி கற்பிக்கவேண்டுமென்று காதி, ஆகாசத்திற்கும், பூமிக்கும் ஒரே ரூபமாகத் தேவலோகத்தில் தோன்றினர். இதைப்பார்த்த தேவேந்திரன் அக்னிதேவரை அனுப்பி யார் என்று விசாரித்து வரச்சொல்ல அக்னிபகவான் அவ் ரூபத்தினிடம் சென்றார். அவ் ரூபம் அக்னியைப்பார்த்து "நீர் யார் என்று கேட்க" நான் அக்னிதேவன் எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்க வல்லவன் என்று மறுமொழி கூறினர். அவ் ரூபம் ஒரு துரும்பை எடுத்துத் தரையில் வைத்து அதை எரிக்கும்படி அக்னிதேவரைக்கேட்க அவர் தன்முழுச்சக்தியுடன் அத் துரும்பைத்தஹிக்க முயற்சித்ததில் முடியவில்லை. அவமானமடைந்து தேவேந்திரனிடம்போய் நடந்ததை அறிவித்தார். பிறகு தேவேந்திரன் வாயுபகவானை அனுப்ப அவரும் அத்துரும்பை அசைக்கமுடியாமல் அவமானம் அடைந்து திரும்பிவந்தார். அப்பால் தேவேந்திரன் நேரிற் செல்ல ரூபம் மறைந்துவிட்டது தேவேந்திரன் இதைப்பற்றிச் சிந்திக்கலானன். அப்பொழுது பராசக்தி (ஈசுவரி) தோன்றித் தேவேந்திரனைப் பார்த்துத் தேவர்கள் அடைந்த ஜெயம் ஈசுவர கிருபையால் ஏற்பட்டதென்பதை மறந்து கர்வமடைந்திருந்ததால் அது பிசகென்றும் எப்பொழுதும் ஈசுவர சிந்தனை இருக்கவேண்டியதவசியமென்று அவர்களுக்கு எடுத்துக்காட்ட ஈசுவரனே பெரு ரூபமாகத்தோன்றி வாயு அக்னி இவர்கள் கர்வத்தைப் பங்கப்படுத்தினதாகச் சொல்லி மறைந்தாள்.

இராமன்—ஈசுவரன் ஸர்வ வியாபகர் என்பதற்கு வேறு ஒரு கதை சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

உபா.—முன்னொரு காலத்தில் மதுரையில் வீற்றிருக்கும் சுந்தரேசக் கடவுள் தன்னுடைய பக்தனை மாணிக்கவாசகரையும் பிட்டு விற்று ஜீவன் செய்த பக்திமதியாகிய ஒரு பிராஹ்மணியையும் இரக்ஷிக்கும் பொருட்டு மண்வெட்டும் கூலிக்காரன் போல் வேஷம்பூண்டு, வேலைசெய்ய, அரசன் சரியாய் வேலை செய்யவில்லையென்று நேரில் வந்து கண்டித்தான். அவர் கேட்காமல் முன்போலவே அஜாக்ரதைபாகவே வேலை செய்தார். அரசன் சினங்கொண்டு அவர் முதுகில் பிரம்பால் அடிக்க அடி அரசனும், பட்டணத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் முதுகில் பிரம்படி பட்டதாக உணர்ந்தார்கள். தக்ஷணமே அடி கூலியாளைக்காணமுடியவில்லை. அதன் பேரில் கூலி ஆளாக வந்தவர் சுந்தரேசக்கடவுள் என்று அரசன் உணர்ந்தான்.

இராமன்—ஈசுவரன் அடிபட்டால் மனிதர்கள் தாங்களும் அடிபட்டது போல் உணர்வதற்குக் காரணமென்ன ?

உபா.—சர்வ வியாபகரான ஈசுவரன் மனிதன் சரீரத்துள்ளும் பிரகாசிக்கிறார். மனிதன் சரீரம் ஈசுவரன் சரீரத்தின் ஒரு பாகமே. மனிதன்சரீரத்திற்குள் விளங்கும் ஜீவனும் ஈசுவரனின் ஒரு அம்சமே. அந்த ஜீவன் ஈசுவரனிடமிருந்து வந்து ஈசுவரனை அடைகிறது. சரீரம் அவனிருக்கும் வீடு. ஜீவன் அழிவற்றது. சரீரம் அழிவுள்ளது.

இராமன்—ஜீவன் சரீரத்திற்குள் குடியிருப்பவன் என்றால் ஜீவன் வேறு. சரீரம் வேறு என்று எனக்குத் தெரியவில்லை. விபரமாய்ச் சொல்ல வேண்டுகிறேன்.

உபா.—ஒருவனைப் பார்த்து அவன் சரீரம் கண், காது, முதலியவைகளை யாருடையதென்று கேட்க, "என் கண், என் காது,

என் கை, என் சரீரம்" என்று சொல்லிவருவதைப் பார்க்கிறோம். அதனால் தான் வேறு, தன் சரீரம் வேறு என்று உணர்ந்து ஜவாப்புச் சொல்வதாகத் தெரிகிறது. 'அப்படிக்குத் தான்,' என்று நினைத்துச் சொல்வது ஜீவன்.

இராமன்—அப்படியானால் ஜீவன் சரீரத்தினின்று பிரிக்கக்கூடாத நிலைமையிலிருப்பதாகவல்லவோ எனக்குத் தோன்றுகிறது. கொஞ்சம் விபரமாய்ச் சொல்லக் கோருகிறேன்.

உபா.—புளியங்காய், புளியம்பழம் இவைகளுக்குள்ள வித்தியாசம் தெரியுமா?

இரா.—புளியங்காயிலுள்ள சதை, தோடு இவைகள் ஒன்றைவிட்டொன்று பிரிக்கமுடியாத ஸ்திதியில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. பழத்திலோ அவ்விதமில்லாமல் சதை ஓட்டுடன் ஒட்டாமல் விலகியிருக்கிறது. அவ்விதமே சதையும் அதிலுள் உள்ள கொட்டையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் எளிதாய் விலகிவிடுகிறது. கொட்டையின் பேரிலுள்ள தோடும் அவ்விதமே விலகக்கூடியது.

உபா.—இதற்குக் காரணம் தெரியுமா?

இராமன்—காயில் தண்ணீர்ப்பசை ஐஸ்தியாகவிருப்பதால் உள்ளிருக்கும் சதையும் தோட்டையும் பிரியவொட்டாமல் ஒட்டிக்கொள்ளும்படி செய்கிறது. பழத்திலோ தண்ணீர் வற்றி உலர்ந்து போனதினால் சதை வேறு, கொட்டையின் பேரிலுள்ள தோடு வேறாகப் பிரியக் காரணம் ஏற்படுகிறது.

உபா.—இது போலவே ஜீவனும் அவன் சரீரங்களும்பிரிவை அடையலாம்.

இராமன்—சரீரங்கள் என்று சொன்னீர்களே, அவைகள் யாவை?

உபா.—புளியம்பழத்தில் சதை, தோடு அதிலுள்ள கொட்டை, கொட்டையின் பேரிலுள்ள தோடு அப்பால் பருப்பு இருப்

பது போல் மனிதனுக்கும் (ஜீவனுக்கும்) ஸ்தூல சரீரம், ஸூக்ஷும சரீரம், காரண சரீரம், ஆக மூன்று சரீரங்கள் இருக்கின்றன. காரண சரீரத்திற்குள் ஜீவன் இருக்கிறான்.

இராமன்—ஜீவன் புளியம்பருப்புப்போன்ற ரூபமுடையவனா?

உபா.—அப்படியல்ல, தேஜோஸ் ரூபியாய்க் காரண சரீரத்திற்குள் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். ஆனால் ஷை மூன்று சரீரத்திற்கும் ஷை தேஜஸ் பாவும்.

இரா.—தேஜஸ்ரூபி என்றுலென்ன?

உபா.—பிரகாசம் அதாவது சூரியகாந்தி போன்றவன். லாந்தருக்குள் வைக்கப்பட்ட கண்ணாடி விளக்கில் எரியும் தீபம்போல் பிரகாசிப்பவன்.

இரா.—அப்படி பிரகாசிப்பதாக எனக்குத் தெரியவில்லையே, அது ஏன்.

உபா.—லாந்தல் கண்ணாடியில் அழுக்கேரியிருந்தால் எவ்விதம் உள்ளிருக்கும் வெளிச்சம் வெளியில் தெரியாதோ அதுபோல் சூட்சும சரீரத்துக்குள் உள்ள மனசாகிய கண்ணாடியில் சுயநலங்கருதும் எண்ணங்களாகிய காமம் குரோதம், லோபம்; மோஹம், மதமாச்சிரியமாகிய அவகுண எண்ணங்கள் என்னும் அழுக்கு வெகுவாய்ப்படிந்திருப்பதால் வெளிச்சம் பிரகாசிப்பதைச் சாதாரண மனிதன் உணருகிறானில்லை. ஞானி இவைகளற்றவனானதையால் உணருகிறான். அவகுணங்கள் சூரியனை மேகம் மறைப்பது போல் மறைத்து விடுகிறது, ஆகையால் எப்பொழுதும் பரோபகார சிந்தையுடன் ஷை அவகுணங்களைப் போக்க ஒவ்வொருவரும் பிரயாசைப்பட வேணும்.

இரா.—புளியம்பழம் புளியங்காய், இவைகளின் தன்மையில் ஏற்பட்ட வித்தியாசம் தண்ணீர்ச் சம்பந்தத்தால் ஏற்பட்டதாக நான் உணர்ந்தேன். அவ்விதம் ஜீவனை அவன் சரீரங்களிலிருந்து

பார்க்கக்கூடாத தன்மையிலிருப்பதாக என்னும்படி செய்வது யாது?

உபா.—புளியங்காயிலுள்ள தண்ணீர் வற்றுவது போல் சரீரங்களிலுள்ள ஆசை அல்லது பற்றுதல் ஜீவனைவிட்டு விலகுமானால் அவன் சரீரங்களை விட்டு மனிதன் அதாவது ஜீவன் வேறுபடுவான் அப்பொழுது ஈசுவரனை அடைவான்.

இரா.—ஆசை அற்றுப்போவதென்றால் என்ன? சற்று விபரமாய்ச் சொல்லவேணும்.

உபா.—உலகப்பொருள்களில் முற்றும் ஆசையை ஒழித்துத் துவேஷ புத்தியன்வியில் சரீரத்தில் அபிமானமற்று மண் வகையரா தாது வர்க்கம், புல், பூண்டு வகையரா ஸ்தாவரம், ஊர்வன, நடப்பன, பறப்பன, வகையரா ஜங்கமங்கள், மனிதவர்க்கம் இவைகள் எல்லாவற்றையும் சமதிருஷ்டியாய்ப்பார்த்தும் ஈசுவரனை எல்லாவற்றிலும் பார்ப்பவன் தான் ஆசையற்றவன் என்று சொல்லக்கூடியவன். அவன் இங்கே சரீரத்திலிருக்கையிலேயே மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைந்தவனென்றும் அவனை ஜீவன் முக்தன் என்றும் சொல்வது உண்டு.

இரா.—மோக்ஷ சாம்ராஜ்யமென்று சொன்னீர்களே! அதன் விபரமென்ன?

உபா.—வெவ்வேறு உலகங்களிலுள்ள ஆசையையொழித்து விடுகிறவன் ஜனன மரணத்தினின்று விடுபடுவான். அவனைத் தான் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைந்தவனென்று சொல்லுகிறது.

இரா.—மேற்சொன்ன மூன்று உலகங்களுக்கும் மூன்று சரீரங்களுக்கும் சம்பந்தமென்ன?

உபா.—ஸ்தூல சரீரத்தினால் பூலோக அநுபவத்தையும், ஸூக்ஷ்ம சரீரத்தினால் புவர்லோக அநுபவத்தையும்; காரண சரீரத்

தினால் சுவர்லோக அநுபவத்தையும் ஜீவன் அநுபவிக்கிறான். தண்ணீரில் பிரயாணம் செய்யப்படகு அல்லது கப்பல் போதும், பூமியில் சஞ்சரிக்க வண்டி போதும், ஆகாசத்தில் செல்ல ஆகாச விமானம் Balloon) போதும் மனிதன் வெவ்வேறு சரீரத்தை வெவ்வேறு உலகத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறான்.

இரா.—சரீரத்தில் அபிமானம் அற்றவனுக்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லக்கோருகிறேன்.

உபா.—முன்னொரு காலத்தில் ஒரு பெரும் வியாபாரி இருந்தார். அவர் ஒரு சன்னியாசியின் உபதேசத்தின்பேரில் வியாபாரத் தொழிலை ஒழித்து நிஷ்டையில் புகுந்தார். ஒரு சமயம் ஒரு பிள்ளையார் கோவிலில் நிஷ்டையிலிருக்கையில் சில திருடர்கள் ராஜன் அரண்மனையில் இரவில் ஏறி கொள்ளையடித்துவந்த நகைகளில் முத்து ஹாரம் ஒன்றைக்கொண்டுவந்து தாங்கள் முன் பிரார்த்தனை செய்துகொண்டபடி இருட்டில் பிள்ளையார் விக்ரகத்தின் கழுத்தில் போடுவதாக எண்ணிப்பக்கத்தில் நிஷ்டையிலிருந்த ஷை வணிகன் கழுத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். காலையில் அரசன், அரண்மனையில். முன்னிரவில் களவு போனதாகக் காவலர்கள் அறிந்து தடம் பற்றிவர, ஷை தடம், பிள்ளையார் கோவில்வரை வந்ததில் காவலர்கள் பிள்ளையார் கோவிலை அடைந்தார்கள். அவ்விடத்தில் வணிகன் கழுத்தில் முத்துமாலை இருப்பதைக் காண அவனைத் திருடனென்று மதித்து அடித்தார்கள். அவருக்கு நிஷ்டை கலைந்தது. தன் சரீரத்தைப்பார்த்து "முத்துமாலை போட்டுக்கொண்ட பயலே அடிபடு, அடிபடு" என்று தான் வேறு தன் சரீரம் வேறு என்றுணர்ந்து சொன்னதாகத் தெரிகிறது. சரீரத்தில் அவருக்கு அபிமானமில்லாததால் அடியின் வலியை அவர் உணரவில்லை. இவர் தான் பட்டணத்துப்பிள்ளையார் என்ற ஞானி.

இரா.—மரணமடைவதென்றாலென்ன?

உபா.—ஸ்தூல சரீரத்தை மற்றிரண்டு சரீரங்களுடன் சேர்த்துக் கட்டியிருந்த பிராணக்கயிறு அறுபட ஸூக்ஷ்மக் காரண சரீரத்துடன், ஜீவன் ஸ்தூல சரீரத்தை விட்டுவெளியேத்தி விட்டான் என்று அர்த்தம்.

இரா.—ஜீவன் விஷயமாகத் தாங்கள் என் மனதில் பதியும்படி விபரமாக எடுத்துரைத்ததற்காகத் தங்களை நமஸ்கரிக்கிறேன். தங்கள் அனுக்கிரகம் என்னிடத்தில் எப்பொழுதுமிருக்க கடாக்ஷிக்க வேண்டுகிறேன்.. போய் வருகிறேன்.

சுபம்.

—

1910-ம் வருஷத்து அச்சுச்சட்டத்தின் கீழ் ஜாமீன் வாங்கப் பட்டிருக்கும் பத்திரிகைகள்.

(1) அமிர்த பஜார் பத்திரிகை	...	...		ரூபாய்	5,000
(2) கேஸரி ...	...	...	...	,,	5,000
(3) பம்பாய் கிரானிகல்		...	...	,,	2,000
(4) மஹாராட்டா	...	...	...	,,	1,000
(5) ஹிந்து வாஸ்	...	...	...	,,	1,000
(6) மாடர்ன் ரிவியூ	...	...	...	,,	500
(7) டெக்கான் ஹெரால்டு		...	...	,,	500
(8) நியூ டைம்ஸ்	...	...	...	,,	500
(9) ஹோம் ரூலர்	...	...	...	,,	500
(10) ஸர்ச்லைட்	...	...	...	,,	500
(11) ஹிந்துஸ்தான்	...	...	...	,,	500
(12) நியூ இந்தியா—(பறிமுதல்)	...		...	,,	10,000
,, (புதிய ஜாமீன்)	...		...	,,	2,000
(13) தேச பக்தன்—(பறிமுதல்)	...		...	,,	1,000
,, (புதிய ஜாமீன்)	...		...	,,	5,000

சுலக்ஷணை.

(௧௧-ம் பக்கத்தொடர்ச்சி)

மறுநாட் காலை ஒன்பது மணியாகியும் கமலினியைக் காணாததனால் வேலைக்காரர்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அவள் வழக்கமாய் ஆறுமணிக்கு எழுந்திருந்து வேலைக்காரர்களைக் குறைகூறிக்கொண்டிருப்பாள். மணி ஒன்பதரை ஆயிற்று, பத்துமாயிற்று. அப்பொழுதும் கமலினி எங்கும் காணப்படவில்லை. காலை போஜனஞ்செய்துகொண்டிருந்த சுலக்ஷணையினிடம்போய்க் கமலினியைக் காணோம் என்று தெரிவித்தார்கள்.

ஒரு வேலைக்காரியைக் கமலினியின் அறையிற்போய்ப் பார்த்து வரும்படி சுலக்ஷணை கட்டளையிட்டாள். சற்று நேரத்தில் வேலைக்காரி திரும்பிவந்தாள். அவளுடைய முகமானது வெளுத்திருந்தது.

சுலக்ஷணை—“என்ன சமாசாரம்?”

வேலைக்காரி—“கமலினி—கமலினி இறந்து போய்விட்டாள்”.

“இறந்துபோய் விட்டாளா? கமலினி இறந்து விட்டாளா? அவளிடத்தில் சில குற்றங்கள் இருந்தபோதிலும் அவள் விசுவாசமுள்ள வேலைக்காரியாயிருந்தாள்,” என்றுசொல்லிச் சுலக்ஷணை எழுந்திருந்தாள்.

சுலக்ஷணையும் அவளுடைய குமாரத்திகளும், வேலைக்காரியும் கமலினியின் அறைக்கு போனார்கள். சுலக்ஷணை கமலினியின் சரீரத்தைத் தொட்டுப்பார்த்தாள். அது மிகவும் குளிர்ச்சியாயிருந்தபடியால் அவள் செத்து வெகு நேரமாகியிருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். கமலினியின் சாவு விபரீதம் தெரிந்தது. வேலைக்காரர்களிலொருவரும் இந்தச் சாவிற்காகத் துக்கப்படவில்லை. சுலக்ஷணை மாத்திரம் அதிக வருத்தப்படுபவள்போற் காணப்பட்டாள்.

அநேக காதலர்களையுடைய ஸ்திரீ.

முந்தின அத்தியாயத்திற் சொன்ன சம்பவங்கள் நடந்த மறுநாள் இரவு மணி பத்தரையாயிற்று. சூடாமணி, பாலாமணியின் வீட்

டுக்கதவைத் தட்டினான். பாலாமணியைப்பற்றி வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவள்தான் மதிமானைத் தன் வலையிற் சிக்க வைத்துக்கொண்டிருக்கும் நாடகக்கணிகை. மதிமான் அவளிடத்திற்கு வந்து கொஞ்ச காலந்தான் ஆனபோதிலும், அவனிடமிருந்து நகைகளுக்கென்றும், பட்டுப்புடவைகளுக்கென்றும், வண்டி குதிரைகளுக்கென்றும், மேஜை நாற்காலி கண்ணாடிகளுக்கென்றும், ஏராளமான திரவியத்தைப் பறித்துவிட்டாள். நூறு ரூபாய் கடன் கொடுத்து ஆயிரம் ரூபாய்க்குச் சீட்டெழுதிவாங்கும் வியாபாரியொருவனை அவள் மதிமானுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

பாலாமணி மதிமானிடமிருந்து ஏராளமான பணத்தைப்பெற்றுக்கொண்டபோதிலும், அவள் நாடகத்தைவிட்டு நீங்கவில்லை. நாடகத்தில் அவள் நடிப்பதைப் பார்த்து ஜனங்கள் புகழ்வதைக் கேட்பதில் அவளுக்கு அதிகப்பிரியமுண்டு. மேலும், மதிமானுக்கும் தனக்குமுள்ள சம்பந்தம் சாஸ்வதமல்லவென்பதும் அவளுக்குத் தெரியும். மதிமான் தன்னைவிட்டுப்போய்விட்டால் மற்றொருவனைத் தன் வலையிற் சிக்கவைப்பதற்கு நாடகசாலைதான் தகுந்த இடமென்று அவள் நினைத்தாள்.

இவ்வளவோடு இதைநிறுத்திச் சூடாமணி எதற்காக அவள் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினான் என்பதை நாம் கவனிப்போம். கதவைத்திறந்துவிட்ட வேலைக்காரனைப் பார்த்து, மதிமான் இங்கே இருக்கிறானா என்று சூடாமணி கேட்டான். வேலைக்காரன் பதிற்சொல்லுவதற்குள் மதிமான் அங்கு வந்துசொல்லுகிறான், "உன்னுடைய குரலைக்கேட்டதும் நீதானென்று தெரிந்துகொண்டேன். உள்ளேவா. உன்னைப்பார்க்க எனக்கு அதிக சந்தோஷமாயிருக்கிறது."

சூடாமணி உள்ளே போனான். பாலாமணி அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளுக்குச் சூடாமணியை நன்றாய்த் தெரியும். இரண்டொரு வருடங்களுக்கு முன் இருவரும் அன்னியோன்னியமாயிருந்தவர்கள்.

பாலாமணி—"என் வீட்டில் உன்னைப்பார்க்க நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் நீ என்னவேலை செய்தாய்? சண்டை செய்தாயா?"

சூடாமணி—"அது எல்லோருடைய ஜீவியத்திலும் சம்பவிக்கக்கூடிய சாதாரணமான காரியந்தான். இங்கேயிருக்கிற நம்முடைய சிநேகிதனான மதிமானும் ஒரு காலத்தில் சண்டைசெய்யவேண்டி நேரிட்டாலும் நேரிடும். யார் கண்டார்? உனக்காகச் சண்டைசெய்யவேண்டி நேரிட்டாலும் நேரிடும்."

"அது வேடிக்கையாயிருக்கும்," என்று சொல்லி, பாலாமணி கைகளைக் கொட்டிக்கொண்டு சிரித்தாள்.

மதிமான்—"இப்பொழுது சூடாமணி நீ உன் விரோதியாகிய சிந்தாமணியைப்பற்றிச்சொல்லு. அவனைப்பற்றி ஏதாவது அதிகமாகக் கேள்விப்பட்டாயா? இன்று காலை சமாசாரப் பத்திரிகையில் அவன் இறந்தானென்பது பிசகு என்று எழுதப்பட்டிருந்தது. காயம் பலத்ததாயிருந்தாலும் உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணத்தக்கதில்லையாம்."

சூடாமணி—"அந்த விஷயத்தைப்பற்றி உனக்குத் தெரிந்தமட்டுந்தான் எனக்கும் தெரியும். நான் இப்பொழுது ஒளிந்துகொண்டு திரிகிறேன். அவனுக்குப் பூராவாய்ச் சொஸ்தமாகும் வரையில் போலீஸார் என்னைப்பிடித்து அடைக்கலாம். மதிமானே நான் உன்னிடத்தில் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்."

"அது ஏதாவது இரகசியமான விஷயமா?" என்று மதிமான் பாலாமணியைப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

சூடாமணி—"அது இரகசியமா? இல்லையாவென்பதை நீதான் தீர்மானிக்கவேண்டும். மாறுவேஷம் போட்டுக்கொண்டு வருவதாக எனக்குக் கடிதம் எழுதின ஸ்திரீயைப் பற்றித்தான் நான் பேசப்போகிறேன்."

மதிமான்—"அதை இரகசியமாய்ப் பேசவேண்டிய அவசியமென்ன? மேலும், நான் என் பிரியமான பாலாமணியிடத்தில் ஒன்றையும் ஒளிப்பதில்லை."

சூடாமணி—"அந்த விஷயத்தைப்பற்றி உனக்குத் தெரிந்தவரை நீ பாலாமணிக்குச் சொல்லியிருக்கிறாய் என்று நம்புகிறேன்."

மதிமான்—"ஆம், உண்மையில் எனக்குத் தெரிந்தவரை அவளிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவள் நான் சொல்வதை யாரிடமும் பிரஸ்தாபிக்கமாட்டாள்."

பாலாமணி—"இதுபோன்ற விஷயங்களைக் கேட்பதில் எனக்கு அதிகப்பிரியம். நீ மாறுவேஷம் போட்டுக்கொண்டிருந்த ஸ்திரீயொருத்தியைச் சந்தித்தாய் என்பதுதான் எனக்குத் தெரியும். அதற்கு மேல் ஒன்றும் தெரியாது. என்ன நடந்தது? யார் அந்த ஸ்திரீ?"

சூடாமணி—சற்றுநேரம் யோசித்துவிட்டுச் சொல்லுகிறான், "மதிமான், நான் ஏதாவது சொன்னால் நீ 'வருத்தப்படமாட்டேனென்று' வாக்களிக்கவேண்டும்."

மதிமான் அந்தக் கேள்வியினால் சற்று ஆச்சரியமடைந்து சொல்லுகிறான், "அந்த விஷயம் என் சொந்தச் சகோதரிகளையாவது தாயையாவது பற்றியதாயிருந்தாலும், அதைக்கேட்பதில் எனக்கு ஒரு தடையுமில்லை."

சூடாமணி—"நீ ஏதோ வாயில் வந்தபடி சொன்னது உண்மையாகிவிடும்போலிருக்கிறது."

மதிமான்—"எனக்கு விளங்க ஆரம்பிக்கின்றது. என் தாய் இப்படிச்செய்வாளா? இப்பொழுது யோசித்துப் பார்க்கும்பொழுது அந்த ஸ்திரீ சரியாய் என் தாயவ்வளவு உயரமாயும் அதே வடிவமாயும் இருந்தாளென்று தெரியவருகிறது."

சூடாமணி—"ஆம், உன் தாய்தான் அவள்."

பாலாமணி—" இது அதிக வேடிக்கையாயிருக்கிறது. மதிமான் நீ அன்று உன் தாயை அடக்குவதற்கு ஏதாவது வழிவேண்டுமென்றாயே. அவள் உன் கார்டியன்களைத் தூண்டி உன்னைத் தூரதேசத்திற்கனுப்பவாவது அல்லது உனக்கு இருபத்தோராவது வயது வரும் வரை உன்னைப் புவனாலயம் கோட்டையில் அடைத்து வைக்கவாவது முயற்சி செய்கிறாள் என்று சொன்னாயல்லவா?"

மதிமான்—" ஆம், அவள் என் அதிகாரத்துக்கு அடங்கி நடக்கும்படி செய்யக்கூடிய அவளைப்பற்றிய இரகசியமொன்று எனக்குத் தெரிந்திருந்தால் அது மிகவும் வேடிக்கையாகத்தான் இருக்கும். அப்பொழுது அவள் என்னைத் தூரதேசத்திற்கனுப்புகிறேன் என்றும் புவனாலயம் கோட்டையிலடைக்கிறேன் என்றும் சொல்லமாட்டாள். ஆகையால், அவளைப்பற்றிச் சொல்லுவதனால், சூடாமணி, நீ எனக்கு வருத்தமுண்டாக்குவதற்குப் பதிலாகப் பெரிய உபகாரத்தைச் செய்கிறாய்."

சூடாமணி—" இப்பொழுது சொல்வதற்கு அந்தக் கதை அதிக நீளமாயிருக்கும். மேலும், மாறுவேஷம் போட்டுக்கொண்டுவந்த ஸ்திரீ சுலக்ஷணாதான் என்று நிரூபிப்பதற்கு ஒரு சாக்ஷியும் வேண்டும். என் மனதிற்கு அந்த ஸ்திரீ சுலக்ஷணாதான் என்பது நன்றாய்த் தெரியும். ஆனால், ருஜுவில்லாவிட்டால் உன் தாய் கோபத்துடன் மறுத்துவிடுவாள் என்பது உனக்கே தெரிந்த விஷயம்."

மதிமான்—" உனக்கு எவ்விதமான அத்தாக்ஷி வேண்டும்? அதை அடைவதில் நான் உனக்கு உதவி செய்யக்கூடுமா?"

சூடாமணி—" உன்னுடைய உதவி அவசியம் வேண்டும். நீ இவ்வளவு சொன்னதின்பிறகு அந்த உதவியை மறுக்கமாட்டாயென்று நான் நிச்சயமாய்ச்சொல்லுவேன். மேலும், உன் தாயை உன் அதிகாரத்துக்கு அடங்கச்செய்யவேண்டுமென்பது உன்னுடைய முக்கியநோக்கமாயிருக்கிறது."

மதிமான்—" ஆம், என்னாலாகவேண்டிய உதவியென்ன?"

சூடாமணி—"ஒரு காரியத்திற்காக உன் தாயின் உடுப்புப் பெட்டிகளையெல்லாம் சோதனை செய்யச்சொன்னால் சம்மதிப்பாயா?"

மதிமான்—"ஒரு போதும் சம்மதிக்கமாட்டேன். உனக்காக ஒவ்வொரு பெட்டியையும் அடிவரையில் சோதிப்பேன்."

சூடாமணி—"கமலினி மாறுவேஷம் போட்டுக்கொண்டிருந்த பொழுது தரித்திருந்த உடை நமக்குக் கிடைத்துவிட்டால், மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்த ஸ்திரீ தானல்லவென்று அவள் சொல்லமுடியாது. அந்த உடை அவசியம் அவளுடைய பெட்டிகளிற்றான் இருக்கவேண்டும்."

"இருந்தால் நான் எப்படியாவது அதைக்கொண்டுவந்து விடுகிறேன்," என்றான் மதிமான்.

பாலாமணி—"என் பிரியமான மதிமானே அப்படியே செய். உன் தாய் நம்மிருவரையும் பிரித்துவிடுவாளென்று பயந்துகொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது நீ அவளை உன் அதிகாரத்துக்கு அடங்கும்படி செய்துகொண்டால் நான் பயப்படவேண்டிய தேவையில்லை."

மதிமான்—"அந்த விஷயத்தில் என்னாற்கூடுமானதைச் செய்கிறேன் என்று முன்னமே வாக்களித்துவிட்டேன். நாளைக்காலையில் வீட்டுக்குப்போய்ச் சமயம் பார்த்துப் பெட்டிகளைச் சோதிக்கிறேன். போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு உடனே திரும்பிவிடுவேன். கமலினி என்னும்காரி இறந்துபோனாள் அவளுடைய சரீரம் அடக்கம் செய்யப்படாமலிருப்பதால் நான் வீட்டில் தங்கமாட்டேன். ஆனால் என் தாயைப்பற்றிய விஷயம் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை."

சூடாமணி—"அதைப்பற்றி இப்பொழுது என்னை ஒன்றும் கேட்காதே. அது ஒரு அசாதாரணமான கதை. நாம் தேடுகிற ருஜு அகப்பட்ட பிறகுதான் நான் அந்தக் கதையைச்சொல்லுவேன். அதுவரை நீ உன் ஆவலை அடக்கிக்கொண்டிருக்கவேண்டும். நாளை மாலை நான் உன்னை இங்கே பார்க்கமுடியுமா?"

மதிமான்—“ சண்டை விஷயம் அடங்கும்வரை நீ சில நாட்களுக்கு எங்களோடு இங்கேதானே இருக்கலாம். பாலாமணி, என் நண்பன் உன் வீட்டிலிருக்கலாமல்லவா ? ”

பாலாமணி—“ அவனுக்குச் சம்மதமானால் சந்தோஷமாய் எத்தனை நாட்களுக்கு வேண்டுமென்றாலும் என் வீட்டிலிருக்கலாம.”

“ நீங்களிருவரும் இவ்வளவு அன்போடு சொல்லும்பொழுது நான் மறுக்கவில்லை. சிலநாட்களுக்கு இங்கேதானே இருக்கிறேன்,” என்று சூடாமணி புன்சிரிப்புடன் சொன்னான்.

வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு எல்லோரும் நித்திரை செய்தார்கள். மறுநாட்காலை பத்துமணிக்குக் காலைபோஜனம் பரிமாறப்பட்டது. மதிமான் தன் தாயின் மாறுவேஷ உடையைத் தேடப்புறப்பட்டபொழுது மணி பதினொன்றாயிற்று. பாலாமணியும் சூடாமணியும் தனியே இருந்தார்கள்.

சூடாமணி—“ நீ என் சினேகிதனை உன் வலையிற் கெட்டியாய்ச் சிக்கவைத்திருக்கிறாய். அது ஆச்சரியமல்ல. ஏனென்றால், நீ இப்பொழுது அதிக அழகாயிருக்கிறாய்.”

பாலாமணி—“ உன்வாயாற் சொல்லுகிற இரண்டொரு ஸ்தோத்திர வார்த்தைகள் அந்த முட்டாளாகிய மதிமானாற் சொல்லப்படுகிற ஆயிரம் ஸ்தோத்திர வார்த்தைகளைவிட எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. பழைய நேசத்தை முன்னிட்டாவது நீ என்னைக்கட்டித் தழுவலாகாதா ? ”

“ நான் சந்தோஷமாய் அப்படியே செய்கிறேன்.” என்று அவன் வாயாற் சொன்னபடி செய்கையாலும் காட்டினான். தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்து, கட்டிலில் பாலாமணி சமீபத்தில் போய் உட்கார்ந்து அவள்மேற் சாய்ந்துகொண்டான்.

சூடாமணி—“ என்னுடைய சினேகிதனை மூடனென்று நினைக்கிறாயா ? ”

பாலாமணி—“ஆம், மதிமான் சுத்தமடையனென்பதை நீயும் ஒத்துக்கொள்ளுவாய். அவனிடத்தில் எனக்குத் தெரிந்த வரையில் ஒரு நல்ல குணம்கூட இல்லை.”

சூடாமணி—“நீ கேட்டதெல்லாம் தடை சொல்லாமல் வாங்கிக் கொடுக்கிறானல்லவா? அந்த நல்ல குணம் மாத்திரம் அவ[illegible] கிறது.”

பாலாமணி—“அது கிடக்கட்டும். உன் சகோத[illegible] தை மதிமானுக்கு மனைவியாக்க நிச்சயிக்கப்பட்டிருக்[illegible] எனக்குத் தெரியவந்தது. நான் அம்புஜத்தை நாடகசாலையி[illegible]பார்த் தேன். அவள் எவ்வளவு அழகான பெண்ணாயிருக்கிறாள். அவளை இந்த முட்டாளாகிய மதிமானுக்கு விவாகம் செய்வது பரி[illegible]பகர மாயிருக்கிறது.”

சூடாமணி—“நாம் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசக்கூடாது. உயர்குடும்பங்களில் நடக்கும் கலியாணங்களெல்லாம் இப்படித்தானி ருக்கும். இதைவிட்டு வேறு எதையாவது பற்றிப்பேசுவோம். நாமிருவரும் பலமணி நேரத்திற்குத் தனியாயிருக்கப்போகிறோம், மதிமான் திரும்பிவர அதிகநேரம் செல்லும்.”

பாலாமணி—“நாம் தனியாயிருக்கப்போகிறோமேயென்று நீ வருத்தப்படுகிறாயா?”

சூடாமணி—“நான் ஏன் வருத்தப்படவேண்டும். நீ முன்னி ருந்ததைவிட இப்பொழுது அதிக அழகாயிருக்கிறாயென்று நான் சொல்லவில்லையா? நீ சந்தோஷமாயிருக்கிறாயா? ஆனால் நான் அந் தக் கேள்வியைக் கேட்கவேண்டிய தேவையில்லை. நாடகசாலையில் நீ சந்தோஷமாய் ஆடுவதை நான் பார்க்கிறேன். உனக்கு ஒரு நேர்த்தியான வீடும் ஏராளமான திரவியமும் இருக்கின்றன. கடந்த இரண்டு வருஷத்தில் உனக்கு எத்தனை காதலர்கள் ஏற்பட்டார்கள் என்பதை நீ என்னிடம் ஒளியாமற்சொல்லவேண்டும்.”

பாலாமணி—" என் அன்பான சூடாமணியே நான் உன்னிடத்தில் உண்மையைச் சொல்லுகிறேன் கேள். முதலில் ராஜகிரி ஜமீந்தார் போக்குவரத்தாயிருந்தார். அவர் கிழவர். பொய்ப்பற்களை வைத்துக்கொண்டு முகத்தில சாயத்தைப் பூசிக்கொண்டுமிருப்பார். எனக்குப்பிடிக்காததனால் நான் அவரைத் துரத்திவிட்டேன். இரண்டாவது வந்தவர் சாமிநாததேசிகர் என்ற சாமியார். உனக்குத் தெரியுமல்லவா அவரை? அவர் சிறந்த பக்தர் என்று பேர் போனவர். அவர் நல்ல ஆசாமிதான். ஆனால் ஜமீந்தாரைப்போல் அவ்வளவு தொகை கொடுக்க அவரால் முடியவில்லை. ஆகையால் அவரையும் கொஞ்சநாளையில் விரட்டிவிட்டேன். அதற்குப் பிறகு சுப்பையா பிள்ளை என்ற டம்பாச்சாரி வந்து சேர்ந்தான். அவன் என்னையே ஏமாற்றிவிட்டான். நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைத்திருந்த பொன் பொருளையெல்லாம் என்னிடத்திலிருந்து பறித்துக்கொண்டு போய்விட்டான். சுப்பையாபிள்ளை ஓடினபிறகு கணபதி அய்யர் என்ற நியாயாதிபதி வந்தார். அவரை எல்லோருக்கும் தெரியுமாதலால் அவர் என் வீட்டிற்கு வெகு இரகசியமாய் வந்து போய்க்கொண்டிருந்தார். அவர் எனக்கு ஏராளமான பொருள் கொடுத்துக்கொண்டிருந்தார். அந்தப் பணத்தைக்கொண்டு சுப்பையாபிள்ளை அடகு வைத்துவிட்டுப்போன என்னுடைய நகைகளையெல்லாம் திருப்பிவிட்டேன். கணபதி அய்யர் தீர்ப்புச்சொல்லும்பொழுது பிரசங்கம் பண்ணுவது வழக்கமாம். ஒரு சமயம் ஒரு வேலைக்காரப்பெண் தன்னுடைய எஜமான் வீட்டில் திருடவந்த வாலிபனொருவனுக்கு உதவி செய்ததாக ஒரு கேஸ் கணபதி அய்யரிடம் வந்தது. விசாரணையில், அந்தப்பெண் திருடனாகிய வாலிபனிடத்தில் இச்சைகொண்டு அவனை இரவில் இரகசியமாய் வீட்டிற்குள் கூட்டிவைத்திருந்தாளென்றும், அவள் கண்ணயர்ந்தபிறகு அவன் திருடிக்கொண்டு ஓடிவிட்டானென்றும் வெளியாயிற்று. அந்தப் பெண்ணை விடுதலை பண்ணியும், வாலிபனைத் தண்டித்தும் கணபதி அய்யர் தீர்ப்புச் சொன்னார். தீர்ப்புச்சொல்லும்பொழுது காமத்தினால் வருங்கெடுதல்களைப்பற்றி நியாயசபையிலுள்ளோர் அனைவரும் மனமுருகும்படி

ஒரு பிரசங்கம் செய்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள், அவர் பரஸ்திரீ கமனம் என்பதைக்கனவிலும் எண்ணுத புண்ணிய புருஷராயிருக்கவேண்டுமென்று நினைத்தார்கள்."

சூடாமணி—" உனக்கும் இந்தக் கதைக்கும் என்ன சம்பந்தம்? கணபதி அய்யர் உனக்கு அறிமுகமாவதற்கு முன் நடந்ததல்லவா இது?"

பாலாமணி—" ஆம், எனக்கும் இதற்கும் உள்ளசம்பந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். நியாயாதிபதி என்னிடம் வந்து மாதம் மூன்ருயிற்று. நான் என் வேலைக்காரியை விலக்கிவிட்டுப் புதிதாய் ஒருத்தியை வேலைக்குச் சேர்த்தேன். இரவில் நியாயாதிபதி முக்காடு போட்டுக்கொண்டு என் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினர். புது வேலைக்காரி கதவைத் திறந்துவிட்டாள். அவளைப்பற்றித்தான் கணபதி அய்யர் நியாய சபையில் பிரசங்கம் செய்தது. அவளை என் வீட்டிற் சந்தித்தவுடன் அவர் மனம் என்னபாடுபட்டிருக்குமென்பதை யோசித்துப்பார். மறு நாள் நூறு ரூபாய் நோட்டொன்றை அனுப்பிவிட்டு என் வீட்டிற்கு வாராமல் நின்றுவிட்டார். நியாயாதிபதிக்குப் பிறகு நாடகத்தில் சேர்ந்த இராமலிங்கம் பிள்ளை இங்கு வந்து கொண்டிருந்தான். அவனுக்குப் பிறகுதான் உன் சிநேகிதனுகிய மதிமான் வந்து சேர்ந்தான். இதுதான் சென்ற இரண்டு வருஷமாய் என் வீட்டில் நடந்த விஷயம்."

சூடாமணி—" பாலாமணி, நீ இதுவரை எவ்வளவு ஆஸ்தி சேர்த்துவைத்திருக்கிருய்?"

பாலாமணி—" சுப்பையாபிள்ளையுடன் சிநேகிப்பதற்கு முன் கொஞ்சம் பணமும் நகைகளும் வைத்திருந்தேன். அந்தப் பாமசண்டாளன் என்னை ஏமாற்றி என் பணத்தை வாங்கிக்கொண்டது மல்லாமல் என்னுடைய நகைகளையும் அடகு வைத்துவிட்டு ஓடிப்போனன். கணபதி அய்யரிடம் சம்பாதித்ததெல்லாம் அடகு நகைகளைத் திருப்புவதில் சரியாய்ப் போய்விட்டது. இப்பொழுது ஒரு

வர்ஷமாய்த்தான் பணத்தை மிச்சம்செய்து சேர்த்துவைக்க ஆரம்பித்திருக்கிறேன். இதற்கும் எனக்குத் தெரியாமல் என்ன செலவு வருகிறதோ?"

சூடாமணி—"உன்னைப்போன்ற மற்றைய தாசிகள் பணம் சேர்த்து வைக்கிறார்களா? இல்லையா?

பாலாமணி—என்னைப்போன்ற தாசிகளிடம் பணம் தங்கமாட்டாது. அவர்கள் தங்களிடத்தில் மயக்கங்கொண்ட தனவான்களிடமிருந்து பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். ஆனால் தங்கள் மனதுக்கிச்சையான பிச்சைக்காரர்களுக்காக அந்தப் பணத்தைச் செலவு செய்து விடுகிறார்கள். ஆகையாற்றான் அவர்களிடத்தில் பணம் தங்குவதில்லை. இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதனால் எனக்கு வருத்தமுண்டாகிறது. ஏனென்றால் இளமையில் சம்பாதிக்கிறதையெல்லாம் இப்படிச் செலவுசெய்து விடுகிறோமே, முதுமையில் யார் சோறு போடுவார் என்ற எண்ணம் என் மனதில் உதிக்கிறது."

சூடாமணி—"இப்பொழுது சேர்த்து வைக்காமலிருப்பது உன்னுடைய குற்றந்தான். ஏராளமான வரும்படி இருக்கிறபொழுது நீ ஏன் எல்லாவற்றையும் செலவழித்து விடுகிறாய்?"

பாலாமணி—"ஏன், ஏன் என்று கேள்வி கேட்பது சுலபந்தான். ஏராளமாய்க் குடித்துவிட்டு அதனால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிற குடிகாரனை அவன் ஏன் குடியை நிறுத்தவில்லையென்று கேள். உதாரணமாக நீ ஏன் உன் நடத்தையைச் சீர்திருத்திக் கொள்ளவில்லை? நீ ஏன் மிதமிஞ்சிச் செய்பவனாகவும், எப்பொழுதும் கடனாளியாகவும் இருக்கிறாய்? என் கையில் காசிருந்தால் அது நிற்கமாட்டாது."

பிறகு சூடாமணியும் பாலாமணியும் எழுந்திருந்து உலாவுவதற்காகத் தோட்டத்திற்குப் போய்விட்டார்கள்.

உடுப்புப்பெட்டிகளைச் சோதித்தல்.

நாம் இப்பொழுது மதிமானைப் பின்பற்றிச் செல்லுவோம். சுலக்ஷணை ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். விந்பேசய்ச் சேர்ந்த மதிமானுக்குப் பெட்டிகளைச் சோதிப்பதற்காகச் சாவிகள் வேண்டியிருந்தன. சாவிக்கோர்வை சுலக்ஷணையிடம் இருந்தது. அதை எப்படியாவது கைப்பற்றுவதற்காக மதிமான் தாயினிடத்திற்குச் சென்றான். அவள் சமீபத்திலிருந்த மேஜையின் மேல் சாவிக்கோர்வையைப் போட்டிருந்தாள். மதிமான் அங்கு போனதும் அதைப் பார்த்துவிட்டான். சற்று நேரம் அவன் தன் தாயுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரன் வந்து ஜமீந்தார் நமச்சிவாயமும் வக்கீல லெக்ஷ்மணய்யரும் சுலக்ஷணையைக் கண்டு பேசுவதற்காக வந்திருப்பதாய்த் தெரிவித்தான்.

மதிமான்—“அந்தக் கிழட்டுப்பயலும் பிடுங்கித்தின்னி வக்கீலும் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பது எனக்கு விளங்குகிறது.”

சுலக்ஷணை—“உன் கார்டியன்களை இவ்வளவு அவமரியாதையாய்ப்பேச உனக்கு எவ்வளவு நெஞ்சுத்துணிவு?”

மதிமான்—“ஆம், அந்தப்பயல்களுக்கு அதிக மரியாதை வைக்கவேண்டியது அவசியந்தான். உன்னுடன் சேர்ந்துகொண்டு எனக்கு விரோதமாய் அவர்கள் சதியாலோசனை செய்கிறார்களே அதற்காகவா?”

இதற்குப் பதிற்சொல்லாமல் சுலக்ஷணை எழுந்துபோய் விட்டாள். ஆனால் சாவிகளெங்கே? அந்தக் கோர்வை அப்படியே மேஜையின் மேற் கிடந்தது. சுலக்ஷணை மறந்துவிட்டுப் போய்விட்டாள்.

“இப்பொழுது அவசியம் என் தாயினுடைய இரகசியங்கள் எனக்குத் தெரிய வேண்டும். ஜமீந்தார் நமச்சிவாயமும் வக்கில் லெக்ஷ்மணய்யரும் இங்கே எதற்காக வந்திருக்கிறார்கள்? அவர்கள் என்னைத் தங்களிஷ்டப்படி நடக்குமாறு செய்யவேமென்று என்

ணுகிறார்கள்போலும். அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமாவென்பதைப் பார்ப்போம். நான் இனிமேல் தாமதிக்கக்கூடாது," என்று மதிமான் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

உடனே அவன் சாவிக்கோர்வையை எடுத்துக்கொண்டு உடுப்புப்பெட்டிகளிருக்குமிடத்திற்கு ஓடினான். ஒவ்வொரு பெட்டியாய்த் திறந்து பார்த்துக்கொண்டு வந்தான். ஒன்றிலும் அவன் தேடிய வஸ்து அகப்படவில்லை. கடைசியாய், அவன் கண்ணுக்கு இதுவரை தட்டுப்படாமல் மூலையிலிருந்த ஒரு பெட்டியைக் கண்டான். அதைத் திறந்து பார்க்க அதில் வெள்ளிச்சாமான்கள் இருந்தன. அந்தச் சாமான்களையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்தான். அடியில் மாறு வேஷ உடை இருக்கக்கண்டான். அவனுக்குண்டாகிய ஆச்சரியத்துக்கு அளவில்லை. அந்த உடையை எடுத்துச்சுருட்டி ஒரு சிறு பொட்டணமாகக் கட்டினான். பிறகு வெள்ளிச்சாமான்களையெல்லாம் அள்ளிப் பெட்டியிற்குள் போட்டு அதைப் பூட்டிவிட்டுச் சாவிக்கோர்வையை இருந்த இடத்திற் கொண்டுபோய்ப் போட்டான்.

சாவியைப் போட்டதும் மூட்டையை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளிப்பட்டு ஒரு வாடகை வண்டியில் ஏறினான். பாலாமணி வீட்டிற்கு மதிமான் போய்ச்சேர்ந்தபோது சாயந்திரம் மணி நாலாயிற்று. பாலாமணியும் சூடாமணியும், கையில் மூட்டையுடன் சந்தோஷமாய் வரும் மதிமானைப் பார்த்ததும் அவன் போன காரியம் ஜெயமாயிற்று என்று அறிந்துகொண்டார்கள். மதிமான் மூட்டையைப் பிரித்து உடையை அவர்களிடம் காட்டினான்.

ஏதோ சிறந்த காரியத்தைச் செய்து முடித்தவனைப்போல் அதிக சந்தோஷத்துடன் மதிமான் சொல்லுகிறான்,“ இப்பொழுது நம்மிடத்தில் ருஜா இருக்கிறது. சூடாமணி, நீ வாக்களித்தபடி என் தாயைப்பற்றிய இரகசியம் முழுவதையும் சொல்லவேண்டும். என் தாயை எதிர்ப்பதற்கு வேண்டியவழி எனக்கு இப்பொழுது அவசியம் தேவையாயிருக்கிறது. ஏனெனில், நான் வீட்டைவிட்டு வரும்பொழுதுதான் கிழட்டு நமச்சிவாயம், வாயாடி லெக்ஷ்மண

அய்யர், என் தாய் ஆகிய மூவரும் சேர்ந்து சதியாலோசனைசெய்து கொண்டிருக்கிருர்கள்."

சூடாமணி—" நான் வாக்களித்தபடி ஒன்றும் விடாமற் சொல் லுகிறேன்."

அவன் அப்படியே மாறுவேஷம் போட்டுக்கொண்டிருந்தபோது தனக்கும் சுலக்ஷணவிற்கும் நடந்த சம்பாஷணையையும், சிந்தாமணி என்ற ஒரு பெயர் மாத்திரம் எழுதி ஒரு கடிதம் வந்ததையும், தான் சிந்தாமணியைச் சண்டைக்கு இழுத்ததின்காரணத்தையும், சண்டை முடிந்தபிறகு சுலக்ஷணவிடம் போனபொழுது அவள் தன்னை நடத் தின மாதிரியையும் அவர்களுக்குச் சொன்னான்.

பின்னும் சூடாமணி சொல்லுகிறான், "இது ஒரு மகன் தன் தாயைப்பற்றிக் கேட்பதற்குச் சந்தோஷகரமான கதையல்ல. சுல க்ஷண என்னை வேறு விதமாக நடத்தியிருந்தால் நான் ஆகாயவாணி சாக்ஷியாக உனக்கு இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கமாட் டேன். ஆனால் அவள் என்னிடம் நடந்துகொண்ட மாதிரியினால் நான் அவளைத் தண்டிக்க உத்தேசித்தேன். உன்னிடத்தில் இவ் விஷயத்தைப்பற்றிச் சொன்னது அவளுக்குப் போதுமான தண்டனை தான். அவள் இப்பொழுது உன் அதிகாரத்தில் இருக்கிறாள். நீ அவளை உன்னிஷ்டப்படி ஆட்டிவைக்கலாம். இனிமேல் அவள், மாறு வேஷம் போட்டுக்கொண்டுவந்த ஸ்திரீ தானல்லவென்று மறுக்க முடியாது. ஆகையால் நீ அவர்களுடைய சதியாலோசனைக்குப் பயப் படவேண்டிய தேவையில்லை. ஆனால் நான் இப்பொழுது சொன்ன விஷயத்தினால் நம்மிருவருக்குமுள்ள சிநேகத்தில் ஏதாவது குறைவு வருமோ?"

இந்தக் கேள்வியினால் ஆச்சரியமடைந்து மதிமான் சொல்லு கிறான், "என்னன்பான சூடாமணியே சிநேகத்தில் குறைவா? என் தாயைக் காதலிக்க உனக்குப் பூர்ண சுதந்தரமுண்டு. உன்னை அவள் ஏமாற்றினளே என்று தான் எனக்கு வருத்தமுண்டாகிறது. நீ என் தாயின் இரகசியத்தைச் சொன்னது எனக்கு ஒரு பெரிய உபகாரத்

தைச் செய்ததுபோல் என்று எண்ணிக்கொள். இன்றிரவை இங்கே தானே சந்தோஷமாய்க் கழிப்போம். நாளை நான் வீட்டிற்குப் போய் என் தாய் என்ன சொல்லுகிறாள் என்று பார்க்கிறேன்."

அன்றையத்தினம் கழிந்து மறுநாள் பொழுதுவிடிந்தது. காலை வந்த சமாசாரப் பத்திரிகையில் சிந்தாமணிக்குப் பூரா சௌக்கியமாகிவிட்டதென்று எழுதப்பட்டிருந்தது. ஆகையால் மதிமான் வீட்டிற்குப் புறப்பட்டபொழுது, சூடாமணியும் பாலாமணி வீட்டை விட்டு வெளியே புறப்பட்டான்.

சூடாமணி—"உனக்கும் உன் தாய்க்கும் இன்று நடக்கப்போகிற விஷயம் எனக்குத்தெரியவேண்டும்."

மதிமான்—"சாயந்திரம் நாமிருவரும் ஒன்றாய்ச் சாப்பிடுவோம். அப்பொழுது நடந்த விஷயத்தைப்பற்றி உனக்குத் தெரிவிக்கிறேன்."

சூடாமணி நீலாம்பாள் வீட்டிற்குச் சென்றான். மதிமான் தன் வீட்டிற்குச்சென்றான்.

மதிமான் வீடுபோய்ச்சேர்ந்தபொழுது மணி பன்னிரண்டாயிற்று. அவனுடைய தாயார் முக்கியமான விஷயமாய் அவனைப் பார்க்கவேண்டியபடியால், அவன் வீட்டிற்கு வந்ததும் அவனிடம் வரும்படி உத்தரவிட்டிருப்பதாக, ஒரு வேலைக்காரன் மதிமானுக்குத் தெரிவித்தான். மதிமானும் தன்தாயை உடனே பார்க்கவேண்டுமென்ற ஆவலுடனிருந்தான். ஆகையால் உடனே அவன் தன் தாயினிடம் சென்றான்.

சுலக்ஷணை—"மதிமானே, உட்கார். நாமிருவரும் சற்றுநேரம் சாந்தமாயும் சச்சரவில்லாமலும் பேசுவோம்."

அங்கிருந்த மெத்தை விரிக்கப்பெற்ற கட்டிலொன்றில் படுத்துக்கொண்டு மதிமான் சொல்லுகிறான், "நல்லதம்மா, உனக்குப் பிரியமானபடி நீ பேசிக்கொண்டேயிருக்கலாம். நான் கேட்டுக்கொண்டே

யிருக்கிறேன். நீ அதிகமாய்ப் பேசினால் எனக்குச் சலிப்பு உண்டாகுமென்று பயப்படவேண்டாம். இங்கே அரைமணி நேரம் படுத்திருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்."

சுலக்ஷணை—"ஆரம்பத்திலேயே நீ இப்படி மரியாதையில்லாமல் பேசுகிறாயே. ஆனால் நான் பேசவேண்டிய விஷயம் இதுவல்ல. நான் சொல்வதைக் கவனமாய் கேட்கிறாயா?"

மதிமான்—"நான் கண்ணை மூடிக்கொண்டிருப்பதனால் கவனித்துக் கேட்கவில்லையென்று எண்ணவேண்டாம். கண் மூடப்பட்டிருந்தாலும் காது திறந்துதான் இருக்கிறது."

சுலக்ஷணை—"நான் உன்னிடம் அன்பாய்ப் பேசினேன். ஆனால் நீ படுக்காளித்தனமாய்ப் பேசுகிறாய். என்னை எதிர்ப்பதில் ஏதோ கௌரவம் இருக்கிறதென்று நீ நினைக்கிறாய் போலும், ஆனால் அது குற்றம் என்று உனக்கே தெரியவரும். கடைசியாகக் கேட்கிறேன். நாமிருவரும் சாந்தமாய்ப் பேசுவோமா? அல்லது நான் சொல்லப் போவதையெல்லாம் கட்டளைகளாகச் சொல்லட்டுமா?"

"உனக்கு எப்படிச் சொல்ல இஷ்டமோ அப்படியே சொல்லு. கடைசியில் எல்லாம் ஒன்றாய்த்தான் முடியும்," என்று மதிமான் கொட்டாவிவிட்டுக்கொண்டு சொன்னான்.

சுலக்ஷணை—"நீ இவ்விஷயத்தை இப்படி நடத்தினால், நான் இனித் தாமதமில்லாமல் என்னாலும் உன் கார்டியன்களாலும் தீர்மானிக்கப்பட்ட விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். தூர தேசத்திற்குப் போகவேண்டிய ராஜாங்க உத்தியோகத்தில் நீ நியமிக்கப்பட்டிருக்கிறாய்."

"எவ்வளவு அன்பாய் எனக்கு உத்தியோகம் சம்பாதித்திருக்கிறீர்கள்," என்று சொல்லி மதிமான் சிரித்தான்.

சுலக்ஷணை—"இன்னும் மூன்று நாட்களில் நீ புறப்படவேண்டும். ஆகையால் இப்பொழுதே பயணத்திற்கு வேண்டியவற்றைத் தயார்செய். உன்னுடைய செலவிற்காக உனக்கு மாதம் இருநூறு

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ஸ்ரீ:

வேளாண்மையும் உருளைக்கிழங்கும்.

"தொழுதுண் சுவையி னுழுதுண் ணினிது".

—"ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."

உலகத்தார் செல்வவான்களாகிக் கவலையற்று வாழ்வதற்கு மார்க்கங்கள் மூன்றுள. அவை வேளாண்மையும், வாணிகமும், சேவகமுமாம். இவைகள் முறையே உத்தம மத்திம அதமங்களாகக் கருதப்படுகின்றன. ஒரு செல்வனது விரல் காட்டியவிடத்தில் வேலை செய்வதும், புருவம் அசைத்தபடியே புகுந்து உழைப்பதும், அவனது கண்ணின் அசைவுக்குக் காத்து நிற்பதும், வாயின் சன்னைக்கும் வகையற்று நிற்பதும், அவன் காலாலிட்டதைத் தலையா லேற்று நிற்பதும் மானியான ஒருவனது மனத்தினை மறுகச்செய்து அவனது தீவிர புத்தியுடைமையையும் உயர்குடிப்பிறப்பையும் தாழ்வடையச்செய்கின்றன. ஆகலால் அடிமைத் தொழிலானது எவ்விதத்திலும் எவ்விதத்திலும் ஏற்றதன்று; அன்றியும்,

"அறங்காம்பிய வாளுடை யருக்கவர்க் கேனும்
பெறலருந் திருப்பெறற் பிறர் சிந்தனை பிறிகாம்".

என்று கவிச்சக்ரவர்த்தி கூறியவண்ணம், ஸாதுக்களும் செல்வத்துக்கு அதிகாரிகளாக இருக்க நேரிடின் அடிமைகளை நடத்துவதில் பெரும்பாலும் இரக்கமற்றவர்களாகவே யாகிவிடுகின்றனர். சில பிரபுக்கள் மாத்திரம் தமது அடிமைகளையும் தம்மக்களைப்போலப் பாதுகாக்கின்றனர். இப்படியாகச் சேவகத்தன்மை பெரும்பாலும் இழிதகைமையைக் கருதலால் அதமமென்று தூஷிக்கப்பட்டது. அன்றியும் புத்தியிற் சிறந்த ஒருவன் அடிமைப்படின், தன் எஜமானனது நோக்கப்படியே செய்யக் கடமைப்பட்டவனாக இருக்கவேண்டியவ

னாகலின், தனது புத்தியை யுக்தியோடு கலந்து பெருக்கிக் காட்டுவதற்குத் தக்க காலத்தைப் பெறுகவனாகவே இருந்து மனமழிகின்றான். சில செல்வர் மாத்திரம் கருணையும் உலகியற்கையை யறிந்தவர்களாகித் தமது வேலைக்கு வேண்டிய ஆலோசனைகளையும் தமது அடிமைகளுடனே கலந்து ஆலோசிக்கின்றார்கள்.

வாணிகமோ சேவகத்தைக் காட்டிலும் பன் மடங்கு உயர்ந்தது. மனிதனுக்கு ஊக்கத்தை யுண்டுபண்ணி வைப்பது. யுக்தியை யுருவாக்கவல்லது. புத்தியைப் புரோவிருத்திக்குக் கொண்டுவருவது. ஆயினும் பணத்தின் பெருக்கினால் பேராசையை யுண்டு பண்ணிப் பொய்யையும் அதனைச்சேர்ந்த மற்றவற்றையும் கூடநிலைக்கும்படியாக்க வல்லது இப்படியே எல்லா வாணிகரும் இருப்பார் என்று எண்ண இடமில்லை. உலகத்தில் பெரும்பான்மை யிவ்விதம் நிகழ்ந்துவரக் காண்கிறோம். இந்தத் தொழிலையும் நமது இந்திய தேசத்தில் பிறதேசத்தார் புகுந்து கைப்பற்றிக்கொண்டு, இந்தியரை யடிமையாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஒழிந்த சில இந்திய வியாபாரிகளோ தெய்வத்தையும் மறந்து நாஸ்திகராகவும் மாறிக்கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில் இவர்கள் தமது திரவியார்ஜனம் தமது முயற்சியாலேயே கூடி வருகின்றது என்னும் தீர்மானத்துக்கு வந்து விடுகிறார்கள் ஆகையால் இதனை மத்திமமென்று சொல்வதற்கு வேறான காரணங்களைத் தேடவேண்டியதவசியமில்லை.

வேளாண்மையோ மழை வீழ்ச்சியையே முற்றிலும் எதிர்பார்த்திருக்கக்கூடியதொன்றாகலின், தெய்வவுண்மையை மேற்கொள்ளச்செய்து பக்தியைப் பரப்பும் தன்மையதாக இருக்கின்றது. நட்பைச் செய்வதில் நாட்டமுள்ளது. அன்புக்கும் அருளுக்கும் பிறப்பிடமானது. அடிமைகளையுமாதரிக்கும் இயல்பினையாக்குவது. பல தொழிலாளிகளும் உத்தியோகஸ்தரும் மற்றுமுள்ள ஏழைகளும், இது இன்றியமையாததொன்றென்று எண்ணுவதற்கு இடமானது. இப்பெருஞ்சிறப்புவாய்ந்த நற்றொழிலை யாதரிக்கவேண்டுமென்று எத்தேசத்தாரும், எச்சமயத்தாரும், எல்வருணத்தாரும்

நோக்கங்கொண்டுள்ளார். என்னும் விஷயம் யாவரும் அறிந்ததொன்றே. ஆகவின் இத்தொழிலே உத்தமமானதென்று உறுதியாகச் சொல்லப்பெறும்.

ஆயினும், மழையானது தற்காலத்தில் முற்காலத்தைப்போல அத்தனைச் சிறப்புடன் காணப்படவில்லையாதலின், இத்தொழில் நடைபெறுவது கடினமாக இருக்கின்றது என்பர். மழை பெய்யாமைக்கு நல்ல காற்று இல்லாமை காரணமாகுமென்றும், காற்று அசுத்தப்படுத்துவது ஜன நெருக்கத்தாலாகிறதென்றும், இந்த ஜன நெருக்கமானது, குடிகள் தமது உத்தமத் தொழிலாகிய வேளாண்மையை யறவே விடுத்துச் சேவகத் தொழிலை மேற்கொண்டு கிராமங்களைப் பாலைவனங்களாக்கிச் சிற்றூரை நகரமாக்கி நகரத்தை நரகக்காடாக்குதலால் நேர்கின்றது என்றும் சிலர் கூறுகின்றார்கள். சுகாதார நூலில் பயிர்களும் மரங்களுமே கெட்ட காற்றைப் போக்குகின்றன என்று சொல்லியிருக்கின்றது. அங்ஙனம் பயிர்களும் காடுகளும் அழிந்து பட்டணமாகவே கெட்ட வாயு வளர்வதற்குத் தகுந்த காரணங்கள் ஏற்படுகின்றன. எனவே, வானம் வழங்கி உலகத்தோர் மனத்தாங்கலற்று மானத்துடன் வாழ்வதற்கு இத்தொழிலே முக்கிய காரணமாக நிற்கின்றது; ஆதலாலும் இது உத்தமமான தொழிலென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பெறும்.

நம்மிந்தியநாடு சீதோஷ்ணங்கள் சமநிலையாயுள்ள தேசமாதலின், அதிக உஷ்ண தேசத்திற் பிறந்தவரும் மிகக்குளிர்ந்த தேசத்திற்பிறந்தவரும் யாதொரு கேடுமின்றி வசிப்பதற்கு இடந்தருகின்றது. இப்படி எத்தேசத்தாரும் ஒத்துவாழ்வதற்கு இத்தேசம் இடமாக நிற்பதுபோலவே, எத்தேசப்பொருளும் விளைவதற்கு இத்தேசம் ஏற்ற இடமாதுமேயன்றி வேறன்று. மிளகாய், உருளைக்கிழங்கு காப்பிக்கொட்டை நிலக்கடலை தேயிலை முதலிய இவை போன்ற விளைபொருள்கள் அயல் தேசத்துப் பொருள்களென்பது பல்லோர் கொள்கை. அதற்கு அவர் இப்பொருள்கள் நந்தேசத்

னவல்ல. தத்தேசத்துப் பொருள்களுக்குரிய நாமங்களைப்போல இவற்றின் நாமங்கள் இடுகுறிப்பெயர்களால் அழைக்கப்பெறாமல் தக்க காரணப்பெயர்களாலேயே அழைக்கப்பெறுகின்றன என்கிறார்கள். ஏனெனில், மிளகு போன்ற அழற்சியுண்மையால் மிளகாய் என்றும், உருண்டை வடிவுண்மையாற்பீர்க்கிழங்கென்றும், கடலையைப் போல் ஒரு கூட்டில் இரண்டொன்றாகி நிலத்தில் கிடைக்கும் தன்மைபற்றி நிலக்கடலையென்றும் அயல் தேசத்தில் வழங்கும் அப்பெயர்களாகவே காப்பியென்றும் தேயிலையென்றும், பெயர்கள் தக்க காரணங்களோடு விளங்குகின்றன என்பர். இதனைப் பலர் மறுத்துக்கூறுகின்றனர்.

இமயம் விந்தியம் நீலகிரி முதலிய சிகரமுள்ள மலைத்தொடர்களிலும் அவற்றைச் சேர்ந்த காடுகளிலும் நாடுகளிலும் விளையாப் பொருள்கள் இயற்கையில் இலவென்று சர்வசக்தி பகவான் கூறியுள்ளாராதலின், எப்பொருள்களும் விளையஇந்தியாவே இடந்தரும் என்று சொல்கிறார்கள். ஆயின், இடுகுறிப்பெயர்களாக அவைகட்குப் பெயர்கள் ஏற்பட்டிருக்கக் காரணமென்னவெனில், நம்முன்னோர் காமாதிகளை வெறுத்துள்ளவராகலின், இனத்தை மிகுதிப்படுத்தும் மிளகாயையும் மதத்தைகயதிகப்படுத்தும் கிழங்கினையும் படபடப்பு வீரம் முதலியவற்றைத்தரும் குடிவகைகளையும் வெறுத்து அப்பூண்டுகளைக் களைகளுடன் பிடுங்கி யெறிந்து அநாதரித்து வந்தனரென்றும், பின்னோர் உணவின் சுவைக்காக மிளகாயை மாத்திரம் சேர்த்துக்கொண்டனரென்றும் காரணம் கூறுப. இது ஒருவாறு ஒத்துக்கொள்ளத் தக்கதாக இருக்கின்றது. ஏனெனில் நமது தேசத்துப் பொருள்களிற் பல அயல் தேசங்களில் விளைவிக்க இயலாதிருப்பன போல, அயல் தேசத்துப் பொருள்களென்று கருதப்படுகிற மேற்கூறியவையாவும் நமது தேசத்தில் விளைவிக்க இல்லாதிருப்பின் அக்காரணத்தை பொருத்துக்கொள்ள முடியாதென்று சொல்லிவிடலாம். அப்படியில்லாமல் எப்பொருளுக்கும் ஏற்றவண் நம்மிந்தியாவில் காணக்கிடைக்கின்றன. ஆகையால், அக்காரணம்

ஒத்துக்கொள்ளப்படவேண்டியதேயாயிற்று. அப்படி யெப்பொருளும் விளைய இடந்தருமாவென்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நாம் தலைப்பிற் குறித்துக்கொண்ட உருளைக்கிழங்கு என்னும் விளைபொருளுக்குக் காரமண் இத்தேசத்துக் கிடைப்பின் மற்ற அயல் தேசத்துப் பொருள்களுக்கும் ஏற்றமண்கள் இங்குகிடைக்கப்பெறும் என்றே கொள்வோமாக.

உருளைக்கிழங்கு மலைப்பிரதேசங்களிலும் தோட்டக்கால்களிலும் நல்ல வடிகால்வாயுள்ள பொல பொலத்த மண்ணையுடைய பூமிகளிலும் நிரம்ப உரமேற்றப்பட்ட மணல்பூமிகளிலும் கரிசல் நிலங்களிலும் நன்கு விளையக்கூடிய பொருளென்று வேளாண்மையை விரும்பிக் கற்றுழைக்கும் பெரியோர் கூறுகின்றனர். இத்தன்மையா நிலங்களோ நமது தேசத்தில் எங்கும் காணப்பெறுகின்றன.

இதனால், இத்தேசம் இக்கிழங்கைப் பயிரிட்டுப் பலனடைவதற்குப் பண்புடைய மண்ணை எங்கும் உடைத்தாய் இருக்கின்றது என்பது ஏற்பட்டது. இனி இக்கிழங்கின் உபயோகத்தையும் இயற்கையையும் மற்ற விபரங்களையும் பற்றிச் சுருக்கக் கூறப்புகுவோம்.

இது இற்றைக்கு 400 வருஷங்கட்கு முன் ஸர் வால்டர் ராலி (Sir Walter Raleigh) என்பவரால் அமெரிக்கா கண்டத்திலிருந்து ஐரோப்பா கண்டத்திற்குக் கொண்டுபோகப்பட்டதென்றும், பிறகு ஆசியா முதலானகண்டங்கட்கும் கொண்டுவரப்பட்டதென்றும் சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இதனை ஐரிஷ்(Irish)ஜாதியார் தங்கட்கு ஒரு முக்கிய உணவுப்பொருளாகக் கொண்டு வெகு கவனத்துடன் பயிரிட்டுப் பலனடைகின்றனர் இக்கிழங்கினை எத்தேயத்தாரும் இப்போது ஆகரிக்கின்றார்கள் என்றாலும் இந்த அயர்லாண்டைப்போல, இதர நாட்டார் கவனம் செலுத்தி வருகின்றார்களில்லையென்று அறியப்படுகின்றது. நமது சென்னை ராஜதானியிலும் நீலகிரி பழனி பெங்களூர் உதகமண்டலம் முதலான இடங்களிலும் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றது. இது ஒரே வருஷத்தில் சில இடங்களில் மூன்று போகமும் சில இடங்களில் இரண்டு

போகமும் சாகுபடியாகின்றது. இதில் வெள்ளையும் மஞ்சளுமுள்ள மாதிரிகள் மிகவும் நல்லனவாக இருக்கின்றன.

ஜூன் முதல் செப்டம்பர் வரையிலுள்ள காலங்களில் சமயம் நேர்ந்தபோதெல்லாம், ஆறு உழவுக்குக் குறையாமல் உழுது சுத்தப்படுத்தி ஒரு ஏகராவுக்கு முப்பது வண்டிக்குக் குறையாது மடித்தசாணம் அடித்துப் பரப்பி, மறுபடியும் உழுது எருவுடன் கலந்து இரண்டடிகள் வித்தியாஸத்தில் முகடுகள் போட்டுக் கண்ணிகள் ஏற்படுத்திச் செய்யை நன்முக நேர்த்திசெய்யவேண்டும் இக்கிழங்கினுக்கு மாவுப்பு எரு மிகவும் பிரியமானதால் சாம்பலும் பொட்டிலுப்பு மண்ணும் கலந்து சாணத்துடன் அடித்தலே நலமாகும்.

முன் சொன்னபடி இரண்டடி வித்தியாஸமாய் ஏற்படுத்தப்பட்டுள்ள முகடுகளில் கிழங்குகளையாவது முளைகளையாவது விதைகளாகப் புதைக்கவேண்டும். முதல் போகத்துக்கு ஜூன் ஜூலையிலும் இரண்டாம் போகத்துக்கு அக்டோபர் நவம்பரிலும் விதைகள் விதைக்கவேண்டும். மட்டமான பாத்திகளிலும் ஊன்றிப்பயிராக்கலாமாறுலும் முகட்டுச் சாகுபடியையே கற்றறிந்தோர் விசேஷமாகச் சொல்லுகின்றார்கள். கண் முளைகளை நட்டுப்பயிராக்கினுல் சிறிதும் பலமற்றதானகிழங்குஉண்டாகிறபடியால், இவற்றைக்காட்டிலும் முழுக்கிழங்குகளை விதைத்தலே லாபத்தை மிகவும் தரும். அப்படி விதைக்க நடுத்தரமான கிழங்கே உறுதியானது. ஏகரொன்றில் சுமார் 1500 பவுண்டு நிறையுள்ள முழுக்கிழங்குகளை நடலாம். அப்படியல்லாமல் கண் முளைகளை நடுவதனால் சுமார் 1200 பவுண்டு நிறையுள்ளகிழங்குகளிலிருந்து முளைகளை வெட்டியெடுத்து நடவேண்டும். முகடுகளில் அல்லாமல் பாத்திகளில் நடுவதாயிருந்தால் கண் முளைகளை 9 அங்குல வித்யாஸத்திலும் விதைக்கிழங்குகளை ஒன்றேகால் ஒன்றரையங்குல வித்தியாஸத்திலும் நடுவது சிறமானது.

இப்படி விதைத்தவன்றைக்கு ஜலம் பாய்ச்சினபின்னர் வாரத்துக்கு ஒரு முறை நீர் பாய்ச்சல் வேண்டும். விதைத்த ஒருவாரத்

துக்கெல்லாம் முளையும் கண்டுவிடும். பின் வெகு ஜாக்கிரதையாய் வாரத்துக்கொரு முறை ஜலமிறைத்தலும் மூன்று வாரங்கட்கு ஒரு முறை களை யெடுத்தலும் செய்யவேண்டும். இது சுமார் நான்கு மாதப்பயிரானதால், மொத்தத்தில் இரண்டு கொத்தலும் இரண்டு மண்ணணைப்புமாவது இருத்தல் நல்லது. பத்துத் தடவையாவது நீர் பாய்ச்சியாகவேண்டும். அணைமண் கொடுக்கும்போது சாம்பலுரமும் பொட்டிலுப்புரமும் கலந்து இடுவது திறமாகும்.

அக்டோபர் மாதத்தில் விதையையூன்றினால் மார்ச்சு மாதத்தில் பலனைப்பெறலாம். பயிரின் தழைகள் பழுத்து வாடிப்போன பிறகு தாராளமாய்க் கிழங்கைப்பெறலாம். இது கிழங்குப்பயிரானமையின் மண்ணணைப்பில் மிகுந்த ஜாக்கிரதையெடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தக்கபலனை எதிர்பார்க்கமுடியாது. பயிரின் பழுப்பு நிறத்தைக் கண்டவுடன் நீர்இறைத்தலை நிறுத்திவிட்டு இரண்டு வாரங்கள் கழித்து மண்ணைவெட்டிக் கிழங்கைப்பெற வேண்டும். சாதாரணமாக ஏகர் ஒன்றில் 12,000 பவுண்டு நிறையுள்ள கிழங்குகள் கண்டு முதல் செய்யப்பெறலாம். மிகவும் ஜாக்கிரதையுடன் மண்ணணைப்பு முதலிய செய்யப்பெற்றுப் பூமியும் நன்றாய்ப் பொல பொலத்ததாக இருந்தால் சில சமயங்களில் ஏகரா ஒன்றினுக்கு 18,000 பவுண்டும் கிடைக்கலாகும். இப்போதைய சாதாரண விலைப்பிரகாரம் ரூபா யொன்றுக்கு 60 பவுண்டு வீதம் ஒரு ஏகராவுக்கு 200 ரூபாய் விலையுள்ள கிழங்குகள் சாகுபடி செய்யலாம்.

ஏகரா ஒன்றுக்கு உழுதல் நீரிறைத்தல் களை பிடுங்கல் மண் அணைத்தல் முதலியவற்றிற்கும் மற்றுள்ள செலவிற்கும் சுமார் 150 ரூபாய் ஆனபோதிலும் ஏகரா ஒன்றுக்குக் குறைந்தது 100 ரூபாய் லாபமாகக் கிடைக்கும். உழைத்தவரே பிழைப்பவரும் ஆவார். உழைக்காமலும் முயலாமலும் சும்மா இருந்தால் நமது தேசம் இன்னும் க்ஷீணதசையை யடையவேண்டித்தான் வரும் என்பதில் ஐயமில்லை. பயிர்களைப் பரிபாலிப்பதெல்லாம் குழந்தைகளைப் பரி

பரவிப்பதைக் காட்டிலும் சிரமமானது. ஆயின் உழைப்புக்குத் தகுந்த பலன் பெறுவதில் யாதொரு தடையுமிராது.

கிழங்குகளை வெட்டி யெடுத்தபின் அவற்றைப் பெரிது நடுத்தரம் சிறிது என மூன்று வகையாகப் பிரிக்க, வெளிச்சமும் காற்றுமுள்ள அறையில விஸ்தாரமாகப் பரப்பி வைக்கவேண்டும். இல்லையாயின் கிழங்குகள் உருக்குலைந்து பக்கம் கெட்டுப்போய் விடும். ஐரோப்பியர் இதனை யுணவுப் பொருளாகக்கொண்டது மாத்திரமன்றி இக்கிழங்கினின்று ஒருவிதமான மாவும் சாராயமும் உண்டாக்குகின்றார்கள்.

இதனால் அயல் தேசத்துப் பொருள்கள் என்று நம்மால் கருதப்படும் அவைகளனைத்தும் நமது தேசத்தில் வெகு சுலபமாகச் சிறிது முயற்சியினாலேயே பெறப்படுகின்றனவென்பது விளக்கமாகின்றது.

பத்திராதிபர்.

பெண்களின் உண்மை நிலை.

(※)

இது பெண்களின் மெய்யான கடமைகளை எடுத்துச் சொல்லும். இவ்விஷயத்தைப்பற்றிப் பேசப்புகுங்கால், பல தேச மாதர்களின் ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு ஆராயவேண்டுவது அவசியம். அவ்வாராய்ச்சிக்கு இந்தியமாதரும் ஐரோப்பிய மாதருமே உடன்பட்டவராவர். அந்த ஆராய்ச்சியே நமக்குப் பெண்களின உண்மை நிலைமையையுந் தெரியப்படுத்தும். அப்படியாராயுங்கால் அவ்விருவகை மாதர்க்குமுள்ள குற்றங்குறைகளை நன்கு எடுத்து ஓதவேண்டுவது இன்றியமையாததே.

ஒரு தேசத்தாரைப்பற்றிய விஷயங்களை நாம் அறியவேண்டுமாயின், அவரது உள்ளும் புறம்புமான (வீட்டினுள்ளும் வெளியி

னும்) ஆசாரங்களை நன்னர் கற்கவேண்டியதே. இந்தியமாதரது குணங்களும் ஒழுங்குகளும் அவரது இயற்கையையும் குற்றமொன்றில்லாத ஒளியையும் அவரது நிறை என்னும் தற்காத்தலாலும் அடக்கத்தாலும் காட்டவல்லதாகின்றன. ஐரோப்பிய மாதரது குணங்களோ இயற்கையினும் அதிகப்படும்படியான ஒழுங்கையும் முன்காத்தலையும் அல்லது எச்சரிக்கையையும் அறிவிக்கின்றன. ஒருவன் தன் இனத்தாரின் கூட்டுறவு முதலிய பகிரங்க விஷயங்களையாவது வீட்டுநிலை முதலிய அந்தரங்க விஷயங்களையாவது ஆராய்ந்துகொண்டுவந்தால், மாதர் வகுப்பின் உண்மைநிலை புலப்படாது. ஏனெனில் ஒருபக்கத்துக்கு உயர்வையே அபிமானத்தால் உரைக்கவேண்டிவரும். ஆனால் ஒரு இனத்தாரின் கணக்கிடமுடியாத குணங்களை வேறு இனத்தாரின் குணங்களுடன் ஒத்திட்டு ஆராயும்போதுதான் அவ்வுண்மை நிலை உள்ளங்கை நெல்லிக்கனிபோலவெளியாகும்.

இந்திய மாதரின் உண்மை நிலையைப்பற்றிய முடிவை அறியவேண்டுமாயின், அவரது விவாகவிதியையாராயவேண்டியது கடமையாகும். இந்துக்களின் விவாகக்கட்டானது மிகுதியும் வைரம்பூண்டது. இந்துக்களின் சட்டப்படியான விவாகமுறை ஒரு சாதாரண உடன்படிக்கையாகமாட்டாது; ஞான அனுமானமான ஸம்ஸ்காரத்தைப்புணர்த்திக்கொண்டிருக்கின்றது. இந்து மணமக்களின் ஒழுக்கும் கடமைகளும் அச் சட்டத்திலே நன்கு விதிக்கப்பட்டுள்ளன. இந்துக்களது விவாக முறையானது கட்டுப்பாடுற்ற கடமைகளையும் பலமான பிரேமையையும் மதாசாரங்களையும் மணமக்கட்கு உண்டாக்கிக்கொடுக்கின்றது. ஓர் இந்திய மனைவி ஸஹதர்மிணி என்று அழைக்கப்படுகிறாள். அதாவது அவள் கணவனுடன் சேர்ந்திருந்து தர்மங்களைச் செய்கிறவளென்று பொருள். அவளுடைய சம்மதமில்லாமல் போனால் அவன் செய்யும் கர்மங்கள் பயனளியா என்பது தீர்ந்த கருத்தாகும்.

* * * * * * *

* * * * * — "மனைத்தக்காள் மாண்பிலளாயின் மணமக்லல்லடம் பூண்ட புலப்பட—." என்றது

பெரியோர் அபிப்பிராயம். ஆக மதக்கோட்பாடுகளில் ஒரு இந்து மனைவி தனது கணவனுடன் ஒத்துழைக்கவேண்டுமென்பது பெறப்படுகின்றது. இந்துசாஸ்திர விதிப்படி விவாகமானது ஆத்மோத்ஜீவனமான காரணங்களை யடைவதற்குத் தன்னை இன்றியமையாதவளென்று விரும்புகின்ற தன் கணவனோடு மனைவிக்கும் பொருந்திய சம நிலையைப் போதிக்கிற ஓர் பரிசுத்தமான ஏற்பாடே யொழிய கேவலமான சிற்றின்ப நுகர்ச்சியை யுணர்த்திக்கொண்டு நிற்பதொன்றன்று. அன்றியும் தனது பெற்றோரது மோக்ஷ மார்க்கத்துக்குரிய க்ஷேமலாபங்களைத் தேடுபவனாகவும் பெற்றோரது குணங்களைப் பெருமைப்படுத்துபவனாகவும் உள்ள ஒரு சற்புத்திரனது சம்பந்தத்தையும் விவரிக்கின்றது.

வீட்டின்பம் மதாசாரத்தூய்மை முதலிய ஒத்துக்கொள்ளப்பெறும் தோற்றங்களின் பல கட்டுப்பாடுகளால் உறுதிப்படுத்தப் பெற்றுப் பரிசுத்தமென்று எண்ணப்படுகிற இந்த விவாகக்கட்டானது, இடையிலே நேரக்கூடிய சிறு கஷ்டங்களாலும் நிலையற்றதாக உண்டாகும் வீண் எண்ணங்களாலும் கோட்பாடுகளாலும் துண்டிக்கப்படுவது ஒன்றன்று. மிகவும் பெரிய மரியாதையுள்ள குடும்பங்களிலும் அது பிரிக்கமுடியாததாகும்.

இந்துப்பெண்கள் தமது கன்னிமைப் பருவத்தில் தகப்பனாலும் வாலைப்பருவத்தில் தம் கணவனாலும் கிழப்பருவத்தில் தம் புத்திரனாலும் பரிபாலிக்கப்பெற்று அடங்கியிருக்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அங்கு அவள் அடிமையாக எண்ணப்படுகின்றாளோ? உண்மையில் இல்லை. அவளுக்கு நேரும் பிரயாசைகளெல்லாம் அன்பினாலுண்டாகும் உழைப்பேயாகும். அவள் பெற்றோர் கணவன் புத்திரன் தான் ஆகிய இவர்கட்குச் சுகத்தையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணுகிறாள். தன்மறுப்பு பொறுமை செட்டு தாழ்மை கற்பு உருக்கம் அன்பு ஆகிய இவையே அவளது இயற்கைக்குணங்கள்.

ஒரு ஐரோப்பிய மாது இவற்றுக்கு முழுதும் விரோதமான குணங்கள் உள்ளவளாவாள். அவள், கணவன் பெற்றோர் புத்திரர் இவரைக்காட்டிலும் தன்னையே மேம்படக்கருதித் தற்சுகத்தையும்

தன் கன்னியிலக்களையுமே தேடிக்கொள்வள். விவாகவிலக்காக வேருெரு கணவனையவள் தேடிக்கொண்டால் தனது பெற்ருேர் கணவன் புத்திரன் ஆகிய இவரையும் விலக்கிவிடுவதில் யாதாமொரு ஐயப்பாடுமுண்டாகுமோ? அவளை இந்தியச் சகோதரியோடு ஒற்றுமைப்படுத்திப் பார்க்கும்போது உண்மையும் கபடமற்ற தன்மைகளையும் பெற்றிராமல் இவற்றுக்கு வேறுபட்ட ஒழுங்கிலும் வழக்கத்திலுமே அதிகக் கவனம்செலுத்துபவளாக நன்கு கவனிக்கப்படுவாள். அவளும் அற்ட வணக்கமும் இரக்கமும் கெட்டும் உள்ளவள்தான்.

ஸர் ஹென்றி காட்டன் (Sir Henry Cotton) என்பவர் "இந்துவின் வீட்டு நெறி" (The domestic life of the Hindu) என்னும் பெயருடன் தம்மால் எழுதப்பெற்ற நூலில், ஓர் ஐரோப்பிய வீட்டைக்காட்டிலும் அனுசாரமும் துன்மார்க்கமும் நிரம்பியுள்ளது உலகத்திலேயில்லை. ஒரு பெரிய குடும்பத்திலுள்ள பல பேர்களின் நேசமானது உலகம் புகழக்கூடியதாயும், பெரிய தர்மகாரியங்களிலும் அபிப்பிராயத்தால்மாத்திரமல்லாமல் அநுபவத்தாலும் ஒற்றுமையைக் காட்டும் இயற்கையுடையதாயுமிருக்கின்றது. பெற்ருேன் மகனிடத்தும் மகன் பெற்ருேனிடத்துக்காட்டும் இயற்கையுணர்ச்சிகள் மிகவும் அருமையும் பெருமையுமுடையனவாக இருக்கின்றன. ஒரு இந்து குடும்பத்தின் கூட்டுறவானது அன்பு என்னும் கயிற்ருற் கட்டப்பட்டும் கற்பினுற் பிணிக்கப்பட்டும் நாட்டார் அபிப்பிராயத்தால் ஆளப்பட்டும் நமக்குப் பெரிய வியப்பைத் தந்து பல மரியாதைகளில் நாம் பின்பற்றி நடப்பதற்கு ஓர் வழிகாட்டியாகவும் இருக்கின்றது என்று கூறியிருக்கிருர்.

பொதுவாகச் சொல்லுமிடத்து ஒரு பெண்ணரசியே ஒரு தக்க மந்திரியாக இருக்கின்ருள். அவள் தன் கணவனது குடும்பச் சுமையைச் சிறிதாக்கி அக்குடும்பத்தைச் சந்தோஷத்துடன் இருக்கும்படியாகச் செய்கின்ருள். அவள் தன் மக்களுக்குத் தனது தனப்பாலூட்டுவதுடன் தனது மனப் பாலையும் அன்பால் ஊட்டிச் சகல நற்குண நற்செய்கைகளையும் வளர்க்கிருள். அவளது உடம்பு தசமுயற்சியாலேயே ஆண்மக்கள் மேதாவிகளாக வெளியேறிப் பெரிய

சங்கமேடைகளில் உபந்யாஸகர்களாகவும் தலைவர்களாகவும் அமர்ந்திருக்கின்றனர். ஒரு தினத்தின் பெரும் பாகம் குடும்பத்துடன் அவளது சம்பந்தம் சிறிது விலகுமாயின், அவளது தாய்த் தன்மையும் மனைவித் தன்மையும் நன்கு புலப்படும். அவளில்லாத காலங்களில் குடும்ப காரியங்கள் நன்றாக நடத்தப்பெறாமலும் குழந்தைகள் நன்றாகப் போஷிக்கப்பெறாமலும் போய்விடுகின்றதைக் காண்கிறோம்.

பெண்களே வீட்டுக்குத் தலைவர்கள், அவர்களே அக்குடும்பத்தினைத் தகுதியுடன் ஆள்பவர்கள். ஸ்திரீ புருஷருடைய இயற்கைச் சக்திகளும் கடமைகளும் செய்கைகளுமே குடும்பப் பெருமைக்குக் காரணங்களாக இருக்கின்றன. ஆடவரும் பெண்டிருமே மனுஷத் தன்மை என்னுந் தராசைச் சமப்படுத்துகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்த்தட்டான இயற்கைகளையும் ஒருப்பட்ட நோக்கங்களையும் உடையவர்கள். புருஷன் மனுஷத்தன்மையின் ஒரு சில பகுதிகளான வன்மை தைரியம் உழைப்பு இவற்றின் உருவாக விளங்குகின்றான். ஸ்திரீயோ வேறு சில பகுதிகளான அன்பு அழகு களிப்பு என்னும் இவற்றின் உருவாக விளங்குகின்றாள். ஆடவர் ஒரு வசன நூல் போலும் பெண்டிர் ஒரு செய்யுள் போலும் விளங்குகின்றார்கள். ஆண்மகன் ஒரு தத்துவசாஸ்திரி போலும் பெண்மகள் ஒரு மந்திர சாஸ்திரிபோலும் இருக்கின்றார்கள். புருஷரது புத்தி சுருங்கி மனோபாவத்தில் குறைந்திருக்கின்றது. ஸ்திரிகளது புத்தியோ மனோபாவ மிகுதியால் பெருகிக் காட்டுகின்றது. ஆடவரினது குணங்கள் உறுதியும் கடுமையும் நிர்ணயமுள்ளனவும் ஆனவை. பெண்டிரின் குணங்களோ ஒளியும் பெருந்தன்மையும் சுவையும் உள்ளவை. ஆணியற்கையின் வன்மையானது பேராசையால் முபலுந் தன்மையையும் பெண்ணியற்கையின் வன்மையானது அன்பினால் முயலுந் தன்மையையும் உடையனவாக இருக்கின்றன. புருஷன் கொடையில் நியாயத்தையே முற்கொள்ளுகிறான், ஸ்திரீயோ இரக்கத்தன்மையை முற்கொள்ளுகின்றாள். ஆண் பெரும்பாலும் அற்பச்சிந்தையுடையவனாகக் காணப்படுகின்றான். பெண்ணோ

பெருஞ்சிந்தையுடையவளாக இருக்கின்றாள். புருஷன் பலத்தில் அரசாக விளங்குகின்றான், ஸ்திரீ பெருந்தன்மையின் அரசாய் விளங்குகின்றாள். இப்படி ஆடவரும் பெண்டிரும் வேறுபட்டுத் தோன்றுவரேனும் இவ்விருவரது நோக்கங்களும் ஒருப்பட்டுப் போய்விடின் அக்குடும்பமோ அவ்வரசியலோ அத்தருமங்களோ சிறப்புற்று விளங்குமென்பதில் யாது ஐயமுளது? கடவுள் இவர்களை ஒருப்பட்ட நோக்கத்துடனும் ஒழுக்கத்துடன் இருக்கும்படியே படைத்திருக்கின்றார். இதற்கு அன்பு என்பது நாராக இருக்கின்றது. இதனை, ஆடவரது குணங்களும் செய்கைகளும் பெண்டிருக்கும், பெண்டிரது குணஞ்செய்கைகள் ஆடவருக்கும் இன்றியமையாதனவாக விளக்கிக்காட்டுகின்றன. மனிதனும் மங்கையுமே இயற்கையின் அரசனும் அரசியுமாவார். அவர்கள் ஒற்றுமையுடன் அரசுபுரிந்தால் அவர்களது அரசியலே மேம்பட்டு நிற்கும். அவர்களது ஒத்த வாழ்க்கைத் தெய்விகமானது.

ஆத்மார்த்தத்திலும் பெண்டிரின் குணங்கள் முதன்மைபெற்ற கடமையில் நிற்கின்றன. அக்குணங்களே அவளுக்குத் திருப்தியான வாழ்வைத் தருகின்றன. ஆனால் இப்போதைய பெண்கள் தங்களது மனோபலத்தை வேறு வழியிற் செலவிட்டுக்கொண்டுவருவதால் முன்னைய குணங்களிற் பல மாறுபட்டுக் காண்கின்றன. தேகஜீவனத்துக்கு ஆதாரமானவைகள் நமது காலத்தில் கலக்கத்தையடைந்திருப்பதால், பெண்கள் நிலைமை எப்போது முன்னைய நிலைக்கு வருமோவென்று பரிதாபப்படவேண்டியிருக்கின்றது. ஆதலின் ஒருவனது நாட்டு வாழ்க்கையே அவன் சமாதானமாக வாழ்வதற்கும் நல்ல ஆகாரத்தைப் பெறுவதற்கும் நல்ல உடையும் இன்பமும் அடைவதற்கும் பல வேறு கலப்புக் கூட்டங்களால் இடிபட்டு அவஸ்தையடையாமல் சுகமாக இருப்பதற்கும் வேண்டிய ஒழுங்கையேற்படுத்திக்கொடுக்கின்றது. இந்த ஒழுங்குக்குக் காரணம் மனைவி புத்திரமித்திரரிடத்தில் வைக்கும் அன்பேதான். எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விஷயத்தும் பெண்கள் புருஷருக்குச் சரியான நிலையைப் பெறவேண்டியவர்கள் என்று சொல்வது மிகையினும் மிகை

பாகவே இருக்கின்றது. பெண்கள் தமது இயற்கைக்கேற்பக் குடும்ப பரிபாலனத்திலும் ஆண்கள் தமது இயற்கைக்கேற்பச் சம்பாத்யத்திலும் உழைத்து வருவார்களாயின், அந்நாடு நன்னுடையதாகும். உலகமே பெண்களின் உயர்நடையாலும் அன்பினாலும் அருளினாலுமே நல்வாழ்வைப் பெறவேண்டியிருக்கின்றது.

பத்திராதிபர்.

புதுக்கோட்டை ராஜ்யம்.

(௰-ம் தொகுதி ௰௨-ம் பகுதி ௪௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர கிராம பரிபாலனம்.

பிரதான நகரத்தின் பரிபாலனமானது உத்தியோக ஸங்கமொன்றினால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அந்தச் சங்கத்தில் சில அதிகாரிகளும் ஒரு காரியதரிசியும் இருந்துகொண்டு அதனைப் பரிபாலித்துவந்தனர். அந்த ஸங்கம் பத்துவருஷ காலங்கட்கு நடந்தேறி வந்தது. பல வருஷங்களாக அந்தப் பகுதியால் வரும்படியான ரூபாய் 10,000-க்குக் குறைவானதாக இருந்தாலும் செலவு மாத்திரம் ரூபாய் 40,000-க்கு மேல் ஆகிக்கொண்டே வந்தது. அதாவது நகர பரிபாலனத்தால் உண்டான நன்மைகளை மிகுதியும் அநுபவித்தவர்கள் நகரத்து ஜனங்களாக இருந்தாலும், அதன் செலவுக்கு வேண்டிய தொகையிற் சிறுபாகமே அவர்கள் கொடுத்துவந்தார்கள் என்று தெரிகின்றது.

1903-ம் வருஷத்தில்கூடிய மாகாணப்பிரதிநிதிக்கூட்டமொன்றின் அங்கத்தினர் ஒருவரால் கேட்கப்பெற்ற கேள்விக்குப் பதிலாகத் திவானவர் பின்வருமாறு பதிற்சொன்னார். "இப்போது நகர சங்கத்தின் நிமித்தம் நடத்தப்பெற்றுவரும் உத்தியோகப்பற்றுள்ளவர்களடங்கிய ஸங்கத்தில் உத்தியோகப் பற்றில்லாதவர்களும் கூடி அங்கத்தினராக இருந்து நடத்தவேண்டுமென்பதாக நீங்கள் விரும்புவீர்களானால், பிரிட்டிஷ் இந்திய ஜனங்கள் தற்காலம் தமது சௌக்யத்தின் பொருட்டு நடத்திக்கொண்டுவரும் நகரபரிபாலனக்

கட்குச் செலுத்திக்கொண்டு வருகிற எல்லாவிதமான வரிகளையும் நீங்கள் செலுத்தவேண்டிவரும்” என்று சொன்னார். அப்படியே யவர்களும் சம்மதிக்க நாளடைவில், நகரபரிபாலன காரியத்தில் உத்தியோகப்பற்றில்லாதவர்களும் அங்கத்தினர்களாகச் சேரும் முறை தொடங்கப்பட்டது.

1912-ம் வருஷத்தில், அந்த வருஷத்திய பதினொன்றாவது நெம்பர் சட்டப்படி ஒரு முனிஸிபல் கௌன்ஸிலும் ஏற்படுத்தப் பெற்றது. அந்தக் கௌன்ஸிலில், அக்கிராஸனாதிபதி நீங்கலாக உத்தியோகப்பற்றுள்ளவர் நால்வரும் உத்தியோகப்பற்றில்லாதரால் வருமாக எட்டு அங்கத்தினர் இருந்தார்கள்.

கிராம பரிபாலனமோ வரி வசூலிக்கும் பகுதியாராலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. சில பெரிய கிராமங்களில் குப்பைகளை எடுப்பதற்கும் விளக்கேற்றுவதற்கும் சில வேலையாட்கள் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றனர். பல முக்யமான கிராமங்கள், மாகாண வைத்தியத்தலைமையதிகாரியால் சில பலகாலங்களில் விஜயம் செய்யப்பெறுகின்றன. அவற்றுள் ஐந்து கிராமங்களில், யூனியன் பஞ்சாயத்தார்களே தங்கள் கிராம சுத்தத்தின் பொருட்டுக் கவனித்துக்கொண்டு வருகின்றார்கள்.

பத்திராதிபர்.

சாகபக்ஷணத்தின் மேன்மை.

மாம்ஸாகாரமுண்ணும் மனிதரைவிட சாகாஹாரத்தையே உணவாகக்கொண்ட மனிதர் மேலான பலமும் தைரியமும் மனப்பான்மையும் உள்ளவராயிருக்கின்றனர் என்றும், அதற்குக் கலிகால. பீமஸேனன் எனப்படுகிற ப்ரொபஸர் ராமமூர்த்திநாயுடுவே திருஷ்டாந்தமாகக் கூறக்கூடியவர் என்றும், “ஹெல்த் அண்டு ஹாபினெஸ்” என்கிற சுகாதாரப் பத்திரிகை ஒரு சிறந்த வியாஸம் எழுதியிருக்கின்றது. பிராம்மணர்கள் எல்லோரும் மாம்ஸத்தையாவது முட்டையையாவது கண்டெடுத்துப் பார்ப்பதில்லையே. ஆரோக்கியத்திலாவது சரீரவன்மையிலாவது புத்தியின்மேன்மையிலாவது, மனதின் அமைதி முதலிய குணங்களிலாவது அவர்கள்

மாமஸமுண்பவர்களைவிடக் குறைந்தவர்களாகிவிட்டார்களா? நாம் உண்மையுரைப்போமானால் அக்குணங்களிலெல்லாம் பிராம்மணர்களே மேன்மையுற்றிருக்கின்றனர் என்போம். ஒரு பிராம்மணன் இன்றைக்கு இறைச்சியுண்டு சீரழிந்தானென்றாலும், அவனது மூத்தோர்கள் எப்போதும் அவ்விதம் இருந்திருக்கமாட்டார்களாகையால், அப்பெரியோர்களுடைய மாம்ஸபோஜன ஸம்பந்தமற்ற இரத்த ஸம்பந்தத்தினால் இம்மனிதனுடைய குணவிசேஷங்கள் இன்றைக்கும் சிறப்புவாய்ந்தனவாகவே இருக்கின்றன. பூமியிலுள்ள மிகவும் பெரியதும் பலமுள்ளதுமான பிராணி யானையே. அது சாகபக்ஷணியல்லவா? எத்தனை சிங்கங்கள் சேர்ந்தால் பலத்திலாவது உருவத்திலாவது ஒரு யானைக்குச் சமானமாகலாம்? யானைக்கு அவ்வளவு பெரிய தேகமும் வன்மையும் இருந்தும் அது சாந்தமாகவும், பழகிவிட்டால் தன் எஜமானனுக்கு அடங்கி வேலைகளைச்செய்யும் குணமுடையதாகவும் இருப்பதற்குக் காரணமென்ன? சாகாஹாரமொன்றே என்று சாஸ்திரம் அறிந்தவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். அதற்கு மாறாகச் சிவிங்கி புலி முதலியவைகளோ இறைச்சியையே தின்று பிழைப்பதால், அவையொருவாறு பலம்பெற்றபோதிலும், அடக்கிப் பழக்கக்கூடாத கொடிய சுபாவமுடையவைகளாக இருக்கின்றன. யானையினும் உருவத்திலாவது வன்மையிலாவது சிவிங்கி முதலிய விலங்குகள் சிறந்தவையென்பதற்கில்லை. மிக வேகமாய் ஓடக்கூடிய நல்ல வலியுள்ள நமது குதிரைகளைப் பாருங்கள். அவை புல்லையும் கொள்ளையும் தவிட்டையும் தவிர வேறு எந்த உணவையுண்ணுகின்றன? இறைச்சியை இந்த உபயோகமுள்ள சாந்தமிருகம் அபேக்ஷிக்கின்றதா? காடுகளில் உலாவித்திரிந்து அதிவேகமாக ஓடும் கலைமான்களும் இறைச்சியுணவில்லாமலே எவ்வளவு ஆரோக்கியமாகவும் அழகாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்துவருகின்றன. இறைசசியில்லாமற் புல்லை மேய்ந்து வளர்வதால் உண்மையில் ஏதேனும் அம்மான்கட்குக் குறைவுண்டா? அவை எவ்வளவு சாந்த குணம் மேவிட்டிருக்கின்றனவோ கவனித்தீர்களா?

வைத்திய கலாநிதி.

புதுக்கோட்டைச் சமஸ்தானத்திய, வாசக புஸ்தகசாலை 2-ம் மகாநாடு, புதுக்கோட்டை 1—4—19[illegible] நடவடிக்கைகள்.

1—4—19[illegible] பகல் 12-மணிக்கு புதுக்கோட்டை நகர ஸபா மண்டபத்தில், சமஸ்தானத்திலுள்ள, வாசகபுஸ்தகசாலைகளின் பிரதிநிதிகளும் மற்றும் 500 கனவான்களும் கூடியிருக்க, ஸ்ரீ [illegible] டிஸ்திரிக்டு முன்ஸீப், பிரம்மஸ்ரீ K. S. ராமசாமி சாஸ்திரிகள் அவர்கள் B. A., B. L. அக்கிராஸனத்தின் கீழ் இரண்டாமுறையாக, புஸ்தகசாலை மகாநாடு கூடிற்று. அக்கிராஸனாதிபதியவர்களுக்குப் பூமாலை சூட்டி உபசாரணைச் சங்கத்தின் அங்கத்தினர்கள் எதிர்கொண்டழைத்து புஸ்தகசாலைக் கண்காட்சி ஹாலுக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த பற்பல தேவங்களின், புஸ்தகசாலைக் கட்டடங்களின் படங்களையும் இந்தியாவிலுள்ள, திருவாங்கூர், [illegible]ராஷ்டிர, மாதாந்திர சமாசாரப் பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் பார்வையிட்ட பின்னர், விஷய ஆலோசனைக் கூட்டத்தில் [illegible] தீர்மானிக்கப்படப்போகும் விஷயங்களின் பேரில், தனது அபிப்பிராயங்களை எடுத்துரைத்து உதவி புரிந்தார்கள். கடவுள் பிரார்த்தனை நடந்தது.

2. நீண்ட கரகோஷங்களுக்கிடையே, சமஸ்தானத்து ஜனப் பிரதிநிதி சபை அங்கத்தினரும், பிரபல வக்கீலுமான ம-ள-ள-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரிகள் B.A., B.L. அவர்கள், த[illegible] உத்தியோக அலுவலின்பொருட்டு சென்னை சர்வகலாசாலை[illegible]க்குச் சென்ற உபசாரணைச்சங்க அக்கிராஸனாதிபதியும் [illegible] கல்லூரி பிரின்ஸ்பாலுமான பிரம்மஸ்ரீ இராமச்சந்[illegible]கள் B. A. அவர்களால் தயாரிக்கப்பட்ட வரவேற்புப் பிரசங்கத்[illegible] ஆங்கிலத்தில் படித்தார்கள். தமிழ் தர்ஜமாவையும் படிக்கப்பட்டது. அஃது பின்வருமாறு.

பிரதிநிதிகளே, கனவான்களே!

3. புதுக்கோட்டை சமஸ்தானம் வாசக புஸ்தகசாலை இரண்டாவது மகாநாட்டின் உபசாரணைச் சங்கத்தாருக்காக நான் உங்களை இந்த நகருக்கும், உங்களை வரவேற்று இரண்டாவது மகாநாட்டை நடத்துவதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இந்த இடத்திற்கும் [illegible] மனதுடன் ஸ்வாகதம் கூறி அழைக்கிறேன். எல்லோராலும் [illegible]கப்பட்ட மாட்சிமை தங்கிய மகா மஹாராஜாவின் தலை நகருக்கு

உங்களை வரவேற்பதிலும், இன்றைபத்தினம் நடக்கப்போகிற ஆலோசனையில் உங்களை உதவிசெய்யும்படி கேட்டுக்கொள்வதிலும், எனக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறதென்பதை நான் உங்களுக்கு வெளியிட்டுச் சொல்லவேண்டியதில்லை.

இன்று அட்டவணையிலுள்ள முதல் காரியத்தைச் செய்வதற்காக இந்த மகாநாட்டின் அங்கத்தினர்கள் என்னை அவர்களுடைய பிரதிநிதியாகவும் தலைவராகவும் தெரிந்தெடுத்துக் கௌரவப்படுத்தினதற்காக அவர்களுக்கு வந்தனமளிக்க எனக்கு அனுமதிகொடுக்க வேண்டும். இந்தப்பதவியை என்னை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டபொழுது நான் யாதொரு ஆட்சேபணையும் செய்யாமல் ஒப்புக்கொண்டேன். ஏனென்றால் அவர்கள் என்னிடத்தில் இந்தப் பதவிக்கு உரிய அந்தஸ்துகளைக்காட்டிலும், நான் மஹாராஜாவின் நாட்டில் உயர்ந்த பதவியில் இருக்கிறேனென்பதை முன்னிட்டு என்னை அதை ஏற்றுக்கொள்ளச்சொல்லுகிறார்களென்று எண்ணினேன். மேலும் இன்று அட்டவணையிலுள்ள காரியங்களில் மிகவும் சுலபமும், இன்பத்தைத் தரக்கூடியதுமான உங்களை வரவேற்றல் என்ற கடமையை எனக்கு இட்டதால் நான் அதை உத்தேசித்து அந்தப்பதவியை ஒப்புக்கொண்டேன். மேலும் நான் இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் இந்தமாதிரியான கிளர்ச்சிகளில் நான் விருப்பங்கொள்ளாதவனென்றாவது, அல்லது வெறுப்புக்கொண்டவனென்றாவது, நூதன வழிகளில் மனங்கொள்ளாத முதியோனென்றாவது ஜனங்கள் நினைக்க இடமுண்டென்ற பயமிருந்தது. இப்பொழுது நான் உங்கள் முன்னிலையில் வந்து நிற்பதினால் பொதுஜன காரியங்களில் நான் உற்சாகங்கொண்டவனில்லையென்றாவது, தற்கால விருத்தியாம்ஸ முறைகளிற் பற்றற்ற கன்னெஞ்சனென்றாவது, என்னைப்பற்றி உங்கள் மனதிற் றோன்றிய சந்தேகங்களெல்லாம் முற்றிலும் மாறிவிடுமென்று நம்புகிறேன்.

கனவான்களே:—நாம் எந்தக்கிளர்ச்சியை முன்னிட்டு இங்கு கூடியிருக்கிறோமோ, அது ஏற்பட்டு ஒரு வருஷந்தான் ஆயிற்று. அதை நாம் தூளியில் விட்டும்; போட்டவிடத்தில் கிடக்கும் ஒரு சிசுவென்றே நினைக்கவேண்டும். இந்தியாவிலுள்ள ஜனங்களும், ஜனங்களுக்கான சங்கம் முதலிய ஸ்தாபனங்களும் நெடுநாள் ஜீவித்திருப்பதில்லையென்று அடிக்கடி தயாரிக்கப்படும் ஜனன மரணக் கணக்குகளால் தெரியவருகிறது. அப்படியிருக்க முதலில் சிசுவாயிருந்து வளரும்போது அச்சிசுவுக்கு ஏற்படக்கூடிய பாலாரிஷ்டங்களையும, ஆபத்துக்களையும், கடந்து உஜ்ஜீவிக்கக்கூடிய தன்மை

நமது கிளர்ச்சிக்கு உள்ளதோ என்பதை நினைக்க எனக்கு இயற்கையில் கொஞ்சம் அச்சம் ஏற்படுகிறது. அதை நான் உள்ளபடி தெரிவித்துக்கொண்டதற்கு நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். சர்வஜன ஸம்ரக்ஷணார்த்தம் ஈச்வரன் பூமியில் அவதாரம் எடுத்து அற்புதமான மாயச்செயல்களைச் செய்த காலமெல்லாம் போயிற்று. முன்பு ஒரு கதையில் கூறியுள்ளபடி ஒரு துர்த்தேவதையின் சாபத்திற்கு ஆளான ராஜகுமாரத்தியைக் காத்து அவளை ஆசிர்வதித்து அவளுக்கு அனுக்கிரகம்செய்ய அவள் தொட்டிலண்டை வந்து தோன்றிய நல்ல தேவதைகள், இப்பொழுது நம்மிடத்திலும் வந்து தோன்றி நமது அருமைக் குழந்தையான இந்த நூதனக் கிளர்ச்சியையும், ஆசிர்வதித்து அதற்குக்கொஞ்சம் அனுக்கிரகம் செய்து அருளும்பட்சத்தில் நான் எவ்வளவு சந்தோஷமுள்ளவனாக இருப்பேன்.

இந்தக் குழந்தைக்கு ஒருவயது ஆயிற்று என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதன் ஜனனகாலத்தில் பயங்கரமான ஜர்மனிய யுத்தம் வெகு மும்மரமாய் நடந்துகொண்டிருந்தது. ஹன்னென்று சொல்லப்பட்ட ஜெர்மனியர், ஐரோப்பாக்கண்டத்திலுள்ள கல்விக்குப் பெயர்போன ஸ்தலங்களையெல்லாம் நாசஞ்செய்துவந்த காலத்தில், ஆலங்குடி மஹாஜனங்கள் தம் நாட்டில் ஞானமாகிய வித்தை விதைக்க எண்ணங்கொண்டது, அவர்களுடைய தைரியத்தையும், காரியசித்திக்குவேண்டிய திடமான நம்பிக்கையும், காட்டுவதோடு கூட, முடிவில் தீயவையாவும் அழிவடைய நல்ல ஜெயம்பெற்று நிலைத்திருக்குமென்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. முற்காலத்தில் ஆதென்ஸ் தேசத்தவர்கள் தங்கள் நகரத்திலுள்ள கோவில்களும், வீடுகளும் தீப்பற்றி எரிய அவைகளின் புகைகளுக்கு மத்தியில் ஒலிவைச்செடியானது (Olive) முளைத்து மேல்நோக்கி நன்றாய் வளர்ந்து வருவதைக் கண்ணுற்றனர். இந்த மகாநாடாகிய குழந்தையானது ஆலங்குடியில் கற்போற்பத்தியாகி சென்ற வருஷம் ஜனவரிமீ˚த்தில் ஜனிக்கலாயிற்று. அதன் பெற்றோர்களென்று சொல்வதற்கு இல்லாமற்போனாலும் அதற்குப் பிணைப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் K. வெங்கிட்டராமய்யா, இராமச்சந்திரய்யர், முத்துகிருஷ்ணய்யர் ஆகியஇம்மூன்றுபெயர்களும் ஆவர். பூலோகத்தவராயினும் தெய்வ ஸ்வரூபமாயிருந்து அந்தக்குழந்தை பிறந்த காலத்தில் பக்கத்திலிருந்து ஆசிர்வதித்து அனுக்கிரகித்தவர் நமது கருணைபொருந்தியா-திவானவர்களேயாவர். அவர்கள்தான் அப்பொழுது கூடிய முதல்சபைக்கு அக்கிராசனாதிபதியாகவிருந்து உத்தியோகமுறையில் அதை அங்கீகாரம் செய்தார். யாதொரு கிளர்ச்சி

யும் இவ்விதமான சுபசூசகங்களோடு நடைபெறுவதில்லை. ஆனால் நான் ஒன்றுமாத்திரம் சொல்லுவேன். சூரியன் எவ்வளவு நன்றாய்ப் பிரகாசித்தபோதிலும், செடிகளுக்கு நன்றாய்த் தண்ணீர் விடப்பட்டு அவைகளுக்குரிய நோய் முதலியவற்றால் பீடிக்கப்படாமல், அவைகள் காக்கப்பட்டால்தான் அவை விருத்தியாகும். இவ்விளம் பிராயமான திரவியலோபத்தாலேற்படும் வறட்சியினாலாவது, பிறருடைய சிந்தை ஏளனம் எனப்பட்ட சீதளக்காற்றிலடிபட்டாவது யாதொருவருடைய சுபாவம், பெருமை, முதலிய நற்குணங்களுக்கு இலக்காகிப்பாலது நசித்துப்போகாமலிருக்கும்படி நாம் தக்க ஜாக்கிரதையோடு காத்துவரவேண்டும்.

புஸ்தகசாலை விஷயமான இந்தக் கிளர்ச்சியானது இச்சமஸ்தானத்தில் இப்படி ஏற்பட்டதென்ற விஷயம் நிற்க, ஆதியில் அது எவ்விடத்தில் உற்பத்தியாயிற்று என்பதைப் பொதுவிற் சற்று நாம் விசாரிப்போமாகில், அது மேற்குத்திசையில் வெகுதூரத்திலுள்ள நாடுகளுக்கே நம்மை அழைத்துப்போகும். அங்கிருந்துதான் தற்காலத்தில் நமக்கு மிகவும் உபயோகமாயுள்ள சாதனங்களில் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. பொதுஜன வாசகப் புஸ்தகசாலைகள் ஐரோப்பாக் கண்டத்தைக்காட்டிலும் அமெரிக்காவில் [illegible] ஏற்பட்டுச் சிறப்பாய் நடத்தப்பட்டு வருகின்றன. [illegible] விஷயங்களைப்போலவே படிப்பு விஷயத்திலும், [illegible] முன்னிற்கிறதேயொழிய பின்வாங்கவில்லை. புஸ்த[illegible] அங்கே ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பட்டு வெகு அழகாய் நடத்தப்பட்டுவருகிறது. என்றாலும், நியூ யார்க் (New-York) மெஸ்ஸாச்சுசெட்ஸ் (Massachusetts), சிக்காகோ (Chicago) [illegible]ற இம்மூன்று இடங்களிலுமுள்ள சாலைகளானவை அவைகளால் [illegible]கூடிய முழு நன்மையையும் விளக்கிக்காட்டக்கூடிய தன்மையை உடையனவாய் இருக்கின்றன. ஞானமாகிய நிதியை அடக்கி வைத்துள்ள கணக்கிடக்கூடாத புஸ்தகங்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் பீடங்களோடு கூடி அழகாய் அமைக்கப்பட்டிருக்கும் [illegible]க்கான புத்தகசாலைக்கட்டிடங்களுக்குள், அழைத்துக்கொண்டு போகும் படிகளில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினம் கூடியிருப்பார்கள். என்றாலும் "நகரப்பொதுப்புத்தகசாலைகள்" ஏற்படுத்துவதற்கு முதலிய வழியுண்டாக்கினவர் இங்கிலாந்து தேசத்தவராதலின், அந்தப்பெருமை இங்கிலாந்து தேசத்துக்கே உரியதாகும். அவர்தான் Edward Elwardes என்பவர். சென்ற 1912-ஸு அவருடைய நூற்றாண்டைக் கொண்டாடுவதற்காகக் கிரேட்பிரிட்டனில் எல்லா இடங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து கூடினார்கள். அவரு

டைய பிரயத்தனத்தின்மேல்தான் 1850-வருஷத்தில் முதல் புத்தகசாலை ஆக்ட் என்ற சட்டம் ஏற்பட்டது. அவர் கல்வியும் புத்தகசாலையும் சிலர் எண்ணுகிறபடி செல்வப்பெருக்குள்ளோருக்கே உரிய சாதனங்கள் அல்லவென்றும், பலபேர்களுக்கும் அவைகளில் சுதந்தர பாத்தியம் உண்டென்றும், பகிரங்கமாக எடுத்துச்சொன்னார். இவ்வித மொழிகளால் அவர் கல்வி கற்று ஞானத்தைப்பெறுவதில் ஜனங்களுக்குள்ள சர்வ சுதந்தரத்தையும் உபதேசித்துவந்தார். அவருடைய உபதேசத்தின் பலனாகவே அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில இருபக்கமுமுள்ள முக்கியமான நகரங்களில் புத்தகசாலைகள் கட்டப்பட்டு அவைகள் நாளடைவில் விஸ்தாரமாகப் பரவுவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலும் பரோடாதேசத்து மகாராஜாவானவர் அந்நிய தேசங்களைப் பார்த்துவரப் போனபோது அங்குள்ள ஜனங்களுக்கு இந்த விஷயத்திலுள்ள உற்சாகத்தைத் தானும் கொஞ்சம் மேற்கொண்டவராய், தன்னாட்டிலும் இந்தக் கிளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற தீவிர எண்ணத்தைக்கொண்டு அதற்குத் தகுந்தவரான Mr. Borden. என்ற துரையைத் தருவித்து அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படி திட்டம்செய்தார் இந்தச் சமர்த்தரானவர் பரோடாவில் மூன்று வருஷகாலம் அதாவது 1911-முதல் 1913-முடிய உழைத்தார். புத்தகசாலை விஷயமாய் அவர் செய்த ஏற்பாடானது இன்றைக்கும் நாளைக்கும் அதைப்போல் ஏற்படக்கூடிய கிளர்ச்சிகளுக்கெல்லாம் முதன்மையானதென்று சொல்லத்தக்கதாயும், மற்றவர்கள் அதைப்பார்த்து அனுசரிக்கும்படியான மாதிரியாக இருக்கும் விதமாகவும், அவ்வளவு செம்மையாகவும், சிறப்பாகவும் செய்யப்பட்டிருக்கிறது. முதலில ராஜதானியில் ஒரு மத்திய புத்தகசாலை ஏற்பட்டு அதன் கிளைகளாக ஸமஸ்தானத்திலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும்கிராமத்திலும் புத்தகசாலைகள் ஏற்பட்டு அவைகள் தற்காலம் மேற்படி மத்திய புத்தகசாலையோடு சம்மந்தப்பட்டவைகளாய் இருக்கின்றன. பரோடாவில் இப்பொழுது அறுபதினாயிரம் அச்சுப் புஸ்தகங்களையும் ஆறுபீரம் கையெழுத்துப் பிரதிகளையும் கொண்டுள்ள ஒரு மத்திய புஸ்தகசாலையும், 500-கிராமாந்திர புஸ்தகசாலைகளும் 60-வாசகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் விஷயமாய் வருஷம் 1-க்கு லட்சம் ரூபாய்களுக்கு மேல செலவுசெய்யப்பட்டுவருகின்றன. அங்கே 15-சதுரமைலுக்கு உள்பட்ட ஸ்தலத்திற்கு ஒரு புஸ்தகசாலையாக ஏற்பட்டிருக்கிறது. புஸ்தகசாலைகளைக் கட்டலாம், ஆனால் அப் புஸ்தகசாலைகளுக்கு ஜனங்களைப் போகச்செய்வதெப்படி? இது ஒரு கஷ்ட

மான விஷயமே. ஆனால் பரோடாவில் ஜனங்கள் இருக்குமிடத்திற்கு
புஸ்தகசாலைகளைப் போகச்செய்து இக்கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்
திசெய்திருக்கிறார்கள். சஞ்சாரம் செய்யும் புஸ்தகசாலைகளென்று
சொல்லத்தக்க இவைகள் பரோடா புஸ்தகசாலை ஏற்பாட்டின் ஒரு
முக்கியாம்சமாயிருக்கின்றன. ஜனங்களைப் படிப்பில் புத்தியைச்
செலுத்தச் செய்யும்படியாகப் பிரத்தியக்ஷ போதனை, (visual
instruction) குழந்தைகளின் விளையாட்டறைகள், முதலிய தூண்டு
கோல்கள் அநேகம் உள. இக்கிளர்ச்சியானது பிறகு பரோடாவி
லிருந்து பம்பாயிலும், அங்கிருந்து மைசூரிலும், ஆந்திரதேசத்தி
லும் வந்து பரவியது. பின்னை சொல்லப்பட்ட நாட்டிலுள்ள
பெஜவாடா என்னும் பட்டணத்தில் 1914 ஞு "முதல் மகாநாடு"
கூடிற்று. அந்தத் தெலுங்குதேசத்து நல்லறிவாளர்களெல்லோரும்
இது விஷயத்தில் தங்கள் தலைவர்களாகக்கொண்டவர்களின் சொற்
படி நடந்து இக்கிளர்ச்சியை ஜனங்களுக்கு நன்றாய்ப் பரவச்செய்வ
தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். இதில் விடா
முயற்சிகொண்ட தலைவர்களில் ஒருவர் நம்முடைய சிநேகிதரும்
நமது நன்றிக்கோருபவருமான Mr. S. V. நரசிம்மன் என்பவரே.
இந்தவிதமான கிளர்ச்சியை ஏற்படுத்தித் தன்னாட்டிற் பலனைக்கண்டு
பின்பு இந்த இந்துதேச மண்ணிலே இந்நூதனமான விருக்ஷமா
னது பண்படத்தக்கதென்றும் அது நல்ல சமர்த்தர்களால் விருத்திக்
குக் கொண்டுவரத்தக்கதென்றும் பிரத்தியக்ஷமாய் நிரூபித்துக்
காட்டிய கீர்த்தியைப் பரோடா ராஜ்ஜியமானது அடையப்பெற்றது.

இக்கிளர்ச்சி ஏற்பட்டு 10-வருஷமாகிறது. என்றாலும் இந்தி
யாவில் மற்ற பக்கங்களிலுள்ள ஜனங்கள் அது எவ்வளவு முக்கிய
மான விஷயமென்பதை இன்னும் அறிந்ததாகக் கேள்விப்படவில்லை.
சென்ற ஜனவரிமீ கதில் இந்தியா கவர்ன்மெண்டார் எல்லாப்புத்தக
சாலைத் தலைவர்களையும் வரவழைத்து லாகூரில் ஒருசபை கூட்டினார்
கள். ஆனால், மைசூரைச்சேர்ந்தவரான Mr. Denham துரை
அவர்கள் சொல்லியபடி புத்தகசாலை வேலைவிஷயத்தில் கொஞ்ச
மேனும் பயிற்சியில்லாதவர்களுடைய சபையாக இருந்ததேயொ
ழிய வேறில்லை. அவர்களுடைய தீர்மானங்களெல்லாம் பொதுஜன
புத்தகசாலை ஏற்பாட்டிக்குரிய விஷயங்களில் யாதொரு சம்மந்தமும்
இல்லாதவைகளாயிருந்தன. இந்தச் சிறிய புதுக்கோட்டை ராஜ்ஜி
யத்திலுள்ளவர்கள் புத்தகசாலை சம்மந்தமான இந்தக் கிளர்ச்சியை
இந்த ஸமஸ்தானத்து எல்லைக்குள் ஏற்படுத்திப்பார்க்கத் தீர்மானம்
கொண்டது அநேகர்களுக்கு முதலில் ஆச்சரியமாகவே இருந்திருக்க
வேண்டும். சிலபேர்களுக்கு இன்னமும் அந்த ஆச்சரியம் நீங்க

வில்லையென்று எனக்குத் தெரியும் சென்ற ஜனவரியில்தான் இவ்விஷயமாய்த் துணிந்து ஒரு அடி எடுத்துவைக்கப் [illegible] நம்முடைய செய்கை நியாயமானதென்று உலகத்தாருக்கு எடுத்துக் காட்டித் தேர்ந்த நிபுணர்களும் அடியெடுத்துவைக்க அஞ்சுமிடத்து முரட்டுத்தனமாய்ப் போய் விழுவோர்க்கு ஏற்படும் பெயர், நமக்கும் வாராமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாகும். துணிவை ஒரு நற்குணமாகக்கொண்டு சிலாகித்துச்சொல்லும் சண்டையில், "முதலில் நன்றாய்ப்புடைத்தவன் வெற்றியில் பங்குபெற்றவன்" னென்றும், மனவலிமை இல்லாதார்க்கு வனப்புள்ள மாது கிட்டுதலரிது" என்றும் வழங்குகின்றன. கருத்துக்களடங்கிய ஆங்கிலப்பழமொழிகளும் துணிவை ஒரு குறைவாகக்கருதி இழித்துப் பேசுவன "பதறின காரியம் சிதறும்". "நீரவறிந்து திருந்தச்செய்" என்ற கருத்துக்களடங்கிய வேறுசில ஆங்கிலப்பழமொழிகளும் உள. Empdocles என்ற பெரியவர் Etna என்னும் எரிமலையின் அக்கினி கக்கும் வாயினுள் பிரவேசித்தபொழுது அவரை தெய்வாம்ஸமென்று கருதி ஒருவன் தலைவணங்க, 10 பேர்கள் அவரை முட்டாளென்று அபிப்பிராயம் கொடுக்கத்தயாராயிருந்தனர். இப்பொழுது நீங்கள் அடியில்கண்ட கேள்விகளின் விஷயமாய் உங்கள் மனநிலைமையைக்கண்டு கொடுக்கவேண்டுமாய் வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது நாம் இந்தக் கிளர்ச்சி விஷயமாய் முதலடி எடுத்து வைத்திருக்கிறோம். நாம் நிற்கும் ஸ்தலம் உறுதியான ஸ்தலமா? நமது காரிய சித்திக்கு வேண்டியபொருள் வாரத்து மார்க்கங்களைச் சீர்ப்படுத்தி நம்முடைய பலாபலத்தை மதிப்பிட்டுக்கொண்டோமா? நம்முடைய வேலைக்கானவைகளைப் பழக்கிக்கொண்டோமா? வேலை நடத்துவதற்குவேண்டிய தேர்ச்சிகளையும், உற்சாகம், கல்வியில் ஆசை, பிறரை வசியப்படுத்தத் தக்கசாதிரி அல்லது நடத்தை, சுயநயம்பாராட்டாமை, தன்னலமறுத்துப் பிறர்நலம்கோறல் மனஉறுதி முதலிய குணங்களையும், நாம் கொண்டிருக்கிறோமா, உலகத்தில் ஏற்பட்டுவரும் எல்லாம் பெரிய கிளர்ச்சிகளைப்போல் இதுவும் பயன்படுவதற்கு முக்கியசாதனம், இதில் சம்பந்தப்படக்கூடிய மனிதர்களைத் தவிர வேறு விஷயமொன்றுமில்லை என்று நான் உங்களுக்கு வெளிப்படையாகச் சொல்வேன். உலகத்தைப் பாதாளம் வரையில் ஒரு கலக்காய்க்கலக்கிட்டமகத்தான மதக்கிளர்ச்சிக்காரர்களெல்லாம் தங்கள் தலைவரிடத்தில் சற்றும் மாறாத உண்மையான அன்போடு கூடினவர்களாயும் கொஞ்சமேனும் சுயநயம் பாராட்டாமல் ஊக்கத்தோடு வேலை செய்பவர்களாயும், செய்தல் அல்லது சாதல் என்ற

உறுதியான தீர்மானத்தைக்கொண்டவர்களாயுமுள்ள, வேலையில்
ஆவல்கொண்ட எளிய கூட்டத்தார்களாலேயே நடத்தப்பட்டு வந்
தன. நான் உண்மையில் நம்வேலையைக் கிருஸ்துமதம், இஸ்லாம்,
ஜெஸ்யூட் சங்கம், மதச்சண்டைகள் போலொத்த உயர்த்தகாரியங்
களுக்குச் சமமாக நினைத்துத் தூக்கிப்பேசவில்லை. ஆனால் காரியம்
சங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரிதான். நீங்கள் பணத்தைச்
சேகரிக்கலாம். இருந்தாலும் இதுவும் இந்நாட்களில் மிகக் கஷ்ட
மாகத்தான் ஆகிக்கொண்டுவருகிறது. நீங்கள் சபைகள் கூட்டி, வரு
ஷோற்சவங்களைக் கொண்டாட்டத்துடன் நடத்தலாம். நீங்கள்
உபந்யாஸங்கள் செய்தும் செய்வித்தும் ரிப்போர்ட்டுகளை அச்சிட
லாம். ஆனால் இவைகள் நமது கிளர்ச்சிக்கு ஒரு உணவையும் அல்
லது அதற்கு உயிரையும் ஊட்டத்தையும் கொடுக்கக்கூடிய உண
வையும் கொடுக்கவும் மாட்டா. நான் உங்களுக்கு இது விஷயத்தி
லுள்ள உற்சாகத்தைக் கெடுக்கப்பார்க்கிறேன் என்றாவது அல்லது
இதை விட்டுவிடுங்கள் போதும் நில்லுங்கள் என்று [illegible]
நான் புத்தி சொல்லுவதாகவாவது நீங்கள் என் [illegible]
ணம் கொள்ளக்கூடாது. யத்தனிக்கும் காரிய [illegible]
இன்றியமையாதவைகளான யுக்தி, புக்தி, முன்யோசனை [illegible]
கள் இதற்கும் வேண்டுமென்று மாத்திரமே நான் சொல்லுகிறேன்.
நீங்கள் நோக்கிச் செல்லுமிடம் எதுவென்று நிர்ணயித்துக்கொண்
டீர்களா? என்று தான் நான் உங்களைக் கேட்கிறேன். அதன்
தூரம் எவ்வளவென்றும் அதைப் போய்ச் சேருவதற்கான பலம்
உங்களுக்கு இருக்கிறதா என்றும் கணக்குப்பார்த்துக்கொண்டீர்
களா? அங்கே உங்களை இட்டுக்கொண்டுபோகும் வழி சுகமானதா
அல்லது கரடுமுரடானதா? கசப்புள்ளதா? அல்லது அபாயகரமா
னதா? என்ற விஷயத்தைத் தெரிந்துகொண்டீர்களா? போதுமான
உற்சாகத்தையும் தைரியத்தையும்கொண்டு ஆவலுடன் வேலை செய்
யத்தக்க மனிதர்கள்தான் இக்கிளர்ச்சிக்கு முதலில் அத்தியாவசிய
மானவர். இக்கிளர்ச்சிக்கு ஞானத்தகப்பனார்களாக இருப்பவர்க
ளுள் சிலர் அம்மாதிரி மனிதர்களென்றே நினைக்கிறேன். ஆனால்
அம்மாதிரி மனிதர்கள் 2, 3 அல்லது 12 பேர்கள் இருந்தாலும்
போதாது. நூற்றுக்கணக்கான பேர்கள் வேண்டும். இது விஷய
மாய்ச் சரியான வழியில் பிரயத்தனங்கள் செய்யப்படுவதற்காகவும்
பிரயத்தனங்கள் எல்லாவற்றையும் ஒரு நோக்கமுடையவைகளாகச்
செய்வதற்கும் பின்னும் அடிக்கடி சொல்லவேண்டியவைகளைச்
சொல்லித் திருத்தவேண்டியவைகளைத் திருத்திக் கட்டிக்கொடுத்
துத் தைரியப்படுத்தி, வேலையை நடப்பிக்கச்செய்வதற்காகவும்,
தக்க அனுபவத்தோடு கூடிய கல்விமான் ஒருவனைத் தலைமையாகக்

கொண்ட பொதுப்புஸ்தகசாலை சபை ஏற்படுத்தப்படவேண்டும். குறிப்பானவிடங்களில் அதன் கிளைகளாக வேறு சில சாலைகள் ஏற்படுத்தப்பட்டு அவைகள் இந்த விஷயத்தில் நன்றாய்ப் பழக்கப்பட்டவரான சிறுவயதும் பேரறிவுமுள்ள மனிதர்கள் வசம் ஒப்புவிக்கப்படவேண்டும். இரண்டாவது அத்தியாவசியமான விஷயம் என்னவென்றால், கட்டிடங்கள் கட்டுவதற்கும் புஸ்தகங்கள், சாமான்கள் வாங்குவதற்கும், புஸ்தகசாலைக்காரர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், நமக்கு ஏராளமான பணம் வேண்டும். இது விஷயத்தில் கவர்ன்மெண்டாருடைய ஆதரவும் அபிமானமும் உண்மையில் ஏற்பட்டு இருந்தாலும் கூட, போதுமான அளவுக்கில்லை. பரோடாவில் இருப்பதுபோல இங்கேயும் ராஜாங்கத்தாருடைய ஒத்தாசையும், பராமரிஷையும் இது விஷயத்திலிருக்கவேண்டும். அங்கே இது ஒரு தனி இலாகாவாக ஏற்பட்டு நடந்து வருகிறதேயொழிய நம்முடையதைப்போல் குடிகளால் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டதல்ல. பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திப் படிப்பைப்பரவச்செய்வதுபோல், இக்கிளர்ச்சியையும் பரவச்செய்வது ராஜாங்கத்தாருடைய கடமையாகும். ஜனங்கள் தனிமையில் இவ்விஷயத்தில் தங்களுக்குள்ள ஆசையால் உழைக்க ஆவல்கொண்டவராய் இருப்பினும், அவர்கள் வசம் அது ஒப்புவிக்கத்தக்கதல்ல. கட்டாயப்படிப்பு, பொதுஜன புஸ்தகசாலை ஆகிய இவ்விரண்டு விஷயங்களும் சேர்ந்து கவனிக்கத்தக்கவைகள். இவைகளில் நாம் எதை முந்தி எடுக்கவேண்டுமென்பதைத் தீர்மானிப்பது கஷ்டம். சரியாகப் பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் மாத்திரம் தான் அதாவது எங்கே ஜனங்கள் படிக்கவாவது கற்றுக்கொண்டிருக்கிறார்களோ அங்கே புஸ்தகசாலைகள் விருத்தியாகுமோ என்ற பரீட்சைசெய்து பார்க்கலாம் என்று சொல்லுகிறவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அதுபோலவே படியாதவர்களைக் கண்களின் மூலம் படிக்கும்படி தூண்டுவதற்கான அழகிய சித்திரங்களும், படங்களும், புஸ்தகங்களும் அடங்கிய புஸ்தகசாலைகள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் அநேகம் பேர்கள் உளர். நான் சொல்லக்கூடியதென்னவென்றால் "ஒன் வில்லில் இரண்டு நாண்களை ஏற்று" என்பதேயாகும். ஆனால் இதைச் செய்வதைக்காட்டிலும் சொல்வது எளிது. புதுக்கோட்டை மகாஜனப் பிரதிநிதி சபையார் ஸமஸ்தானத்தில் கட்டாயப்படிப்பை ஏற்படுத்தவேண்டுமென்று பலமுறை கேட்ட கேள்விகளுக்கு ராஜ்ய முறையில் விசேஷ ஞானத்தையும் காருண்யத்தையும்கொண்ட மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் துரைத்தனம் நடத்துவோர் இப்பொழுது முடியாதென்ற ஒரே உத்திரத்தை கொடுத்து வருவது 'மஹத்தான' இடையூறுகளை முன்னிட்டே

இருக்கவேண்டும். இவ்விரண்டு விஷயங்களையும் ஒரே காலத்தில் ஏற்படுத்தத் துரைத்தனத்தாரைக் கேட்பது கஷ்டங்களை இரட்டிக்கச்செய்யுமென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டுமா? நம்மைக்காட்டிலும் அதிகத் தேர்ச்சியைப்பெறுவிட்டாலும் அதிகச் செல்வத்தைப்பெற்ற மைசூர் துரைத்தனத்தார் இந்தக்கிளர்ச்சியில் அதிகப்பற்றுள்ளவர்கள் மனக்கிலேசம் அடையாவண்ணம் மைசூரில் ஒரு பொதுப்புத்தகசாலையையும், பங்களூரில் மற்றொரு புஸ்தகசாலையையும் ஏற்படுத்திவிட்டுத், திருப்தியாக இருந்துவிட்டார்கள். இக்கிளர்ச்சி பரோடாவில் நன்றாய்ப் பயன்பட்டது. மைசூரிலும் புதுக்கோட்டையிலும் அது பயன்படுவதற்கு என்ன சந்தேகம் என்று ஒருவர் கேட்கலாம். கல்வி விஷயமான சீர்திருத்தங்களும், ராஜாங்க விஷயமான சீர்திருத்தங்களும், செம்மையாய் ஏற்படுவதற்கும், அக்ஷம், ரேகாந்தம் எனப்பட்ட பூகோள எல்லை அளவுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று நான் நன்றாய் ஒத்துக்கொள்ளுகிறேன் என்றாலும் சுவேசுக்குக் கிழக்கே அல்லது நீகிரோ, புலிசர்பம் தென்னை, பனை முதலியவை இருக்குமிடத்தில் பிரஜாபத்தியம் இருத்தற்குரிய எண்ணங்கள் ஒரு காலத்திலும் விருத்தியடையாது எனச் சத்தியம் செய்துகொடுக்கத் தயாராக இருக்கும் ராஜநீதியைக் கற்றுணர்ந்தோரும் சிலர் இருக்கிறார்கள். தொழில் சம்பந்தமான விஷயங்களைப்போல வித்தியா விஷயங்களைப் பற்றிய முடிவான தீர்மானங்களும், நாளுவிதஸ்திதி சந்தர்ப்பங்களைக்கொண்டே ஏற்படவேண்டியதாக இருக்கிறது. வித்தியாவிஷயமாய்ச் சீர்திருத்தம் செய்ய எத்தனிப்பவர் யாரும் அதில் அவர் எவ்வளவு ஆவலோடுகூடினவராயிருந்தபோதிலும், ஜனங்களுடைய வாழ்க்கை நிலைமையையும், அதற்கேற்ற சாதன சௌகரியங்களையும், அவர்களுடைய யுக்தி நிலைமையையும், குணங்களையும், அவர்கள் வழக்கங்களையும், மதக்கொள்கைகளையும் கவனிக்காமலிருக்க முடியாது. பரோடாவில் பலிக்கும் விஷயம் புதுக்கோட்டையில் பலிக்கத்தான் வேணுமென்ற எண்ணத்தை நான்மேற்கொள்ளமாட்டேன். ஒரு பெரிய காரியத்தை எத்தனித்துப் பின்பு அது நடந்தபடி நடக்கட்டுமென்று விட்டுவிடுவது அறியாத்தன்மையேயாகும். முன் யோசனை இல்லாமல் தற்செயலாய்த் தோன்றும் முறைகளை அனுஷ்டிப்பதால் வரும் கெடுதிகளெல்லாம் அவைகளைப் பிர[illegible]களுக்கு அபக்கியாதியைக் கொண்டுவருவதோடு [illegible] அதிலும் கேவலமாய்த் தைரியமும் துணிச்சலும் [illegible] மாலுமிகளைச் சரியான தடம்விட்டு மாறும்படி எச்சரிக்கை செய்யும் தீகாவைப்போலவும் ஆகும்.

இப்பிற்பகலில் நாம் கூடிப்பேசுவதற்கான இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி எனக்குள்ள அபிப்பிராயங்களை உங்களுக்கு நான் இப்பொழுது வெளிப்படையாக விவரித்துவிட்டேன். நம் முன்னுள்ள வேலையின் தன்மை இன்னதென்றும் அதில் நிறைந்துள்ள கஷ்டங்கள் இவை என்றும் அதைச்செய்து முடிப்பதற்கான சக்தி சாதனங்கள் என்னவென்றும் முற்றிலுமில்லாவிட்டாலும் நிதானமாகவாவது நாம் ஜெயம்பெற நம்புவதற்கான கூட்டுறவு உக வியாகாரதென்றும் நான் உங்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தேன். நான் எவ்வித நோக்கத்தோடு வார்த்தைகள் சொன்னேனோ அவ்வித நோக்கத்தோடே நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். கல்விப்பயிற்சி வேலையில் சம்பந்தப்பட்டு 30 வருஷகாலமாய்க் கல்விப் பயிற்சி விஷயங்களில் புத்தியைச் செலுத்தி வந்தமையால் வயது முதிர்ந்த அனுபவஸ்தருக்குள்ள சுதந்தரம் எனக்கும் உண்டென்று நினைக்கிறேன். இக்கிளர்ச்சி எவ்வளவு முக்கியமானதென்பதை உணர்ந்து அறிவதிலும், அது நன்றாய்ப்பரிபக்குவமாவதைக்காண விருப்பம் கொண்டிருப்பதிலும் நான் ஒருவருக்கும் பின்வாங்கினவனல்லன். புஸ்தகமூலமாய் ஞானத்தைப் புகட்டுவதைக்காட்டிலும் குருமுகமாய் ஞானோபதேசம் பெறச்செய்வதை நான் சிலாகித்து விரும்பியகாலமும் உண்டு. வாய்பேசாப் புஸ்தகங்களிலிருந்து பெற்ற உபதேசத்தைக்காட்டிலும் குருவின்வாக்கு உபதேசத்திற்குச் சக்தி விசேஷம் அதிகம் உண்டு. மகத்தான தத்துவங்களும், தர்ம நீதிகளும், மதக்கொள்கைகளும் மூற்காலத்தில் இப்பாரதநாட்டில் மிகுந்த பயபக்தியோடு செவிகொடுத்துக்கேட்கும் சிஷர்களுக்கு வாய்மொழியால் உபதேசிக்கப்பட்டு வந்திருக்க இப்பொழுது குருகுலவாஸமென்ற பெயரே போய் அதற்குப் பதிலாக வித்யாசாலைகளும், விதிபூர்வமான படிப்பும் ஏற்பட்டு மாணாக்கர்கள் குருவினுடைய அம்சத்தைக் கொஞ்சமேனும் கிரகிக்கவாவது, குருசிரேஷ்டருடைய உயிர்போல் நின்றொலிக்கும் இனியமொழியைக் கேட்கவாவது இயலாத தன்மையாய், இறந்தாரைக்கண்டு களிகூரும் Southey என்ற ஆங்கிலேயக் கவிபோல காலம் கழித்துவருவதைப் பார்க்க எனக்கு மிகவும் துக்கமாயிருக்கிறது. ஜனங்களுடைய கல்விச்சங்கமென்று பரோடா கேயிக்வார் அவர்கள் பிரியத்துடன் பெயரிட்டழைத்த இப்புஸ்தகசாலைகளால் ஏற்படும் ஞான வெளிச்சம், வாயுவையும் மின்சாரத்தையும் சேர்த்து யந்திரோபாயங்களால் உண்டாகத்தக்க கிரவமற்ற வெளிச்சம் போலாருமேயொழிய உஷ்ணத்திலாவது பிரகாசத்திலாவது எல்லாவற்றையும் உயிர்ப்பிக்கச்செய்யும் சூரிய கிரணங்களுக்கு ஒப்பாகமாட்டாதென்று எனக்குத் தோன்றுகிறது. இன்று அக்கிராஸனாதிபதியாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டவர் இங்கிலீஷ் சமஸ்கிருதம் ஆகிய இரண்டு பாஷைகளாலும் சிறந்த விஷயங்களைக்கொண்டு இது விஷயமாக உங்களுக்கு என்னைக்காட்டிலும் எடுத்துரைக்கத் தகுந்தவராதலின் இனி நான் பேசுவது அவருடைய எல்லைக்குள் கிரமப்பிரவேசம் ஆகாது என்று பயப்படுகின்றேன்.

நீங்கள் என்னிடம் மரியாதையாய்ப் பொறுமையுடன் கேட்டதற்காக உங்களுக்கு நான் வந்தனம் செய்கிறேன். இப்பொழுது நமது அட்டவணையில் கண்டபடி என்னுடைய உபந்நியாஸத்திலே குறிப்பிடப்பட்ட பற்பல விஷயங்களைப்பற்றி ஆலோசிப்பதில் உங்களைச் சரிவர நடத்துவதற்காகச் சிறந்த ஒரு அக்கிராஸநாதிபதியைக் காரியக்கூட்டத்திற்கு நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். நீங்கள் நல்ல தீர்மானங்களுக்கு வரத்தக்க வெளிச்சத்தை ஸ்ரீ ராமன் உங்களுக்குக் கொடுப்பாராக.

4. பின்னர் அக்கிராஸநாதிபதியவர்கள் காது செவிடுபடும்படியான நீண்ட கரகோஷங்களுக்கிடையே எழுந்து தன்னுடைய முகவுரைப் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் வெகு அழகாகவும் உருக்கமாகவும் படித்தார்கள். தமிழிலும் அவ்விஷயத்தைப்பற்றி 1-மணி நேரம் பிரசங்கித்தார்கள். அதின் சாராம்சம் பின்வருமாறு:—
அறிவை ஜனங்களுக்குப் பரவச்செய்யும் காரியத்தைவிட எக்காலத்தும் எவ்விடத்தும், மேன்மையானதும், அவசரமு முக்கியமுமான காரியம் வேறொன்றில்லையென்றும், எக்காரியமும் அதை நடத்துபவர்களின் சிரத்தையைப்பொறுத்திருக்கிறதென்றும், மனிதன் கடவுளைத்தவிர வேறெவர்க்கும் அடிமைப்பட்டவனல்லனென்றும் சுவதந்திர புருஷனென்றும், ஜென்மசாபல்ய மடைவதற்குற்ற காரியங்களைச் செய்யவேண்டியது அத்தியாவசியமென்றும், உலகத்திலுள்ளவர்களை அன்பாக நடத்தவேண்டுமென்றும், நவீனக்கல்வி முற்கால இந்தியர்களின் நாகரீக வாழ்க்கையைச் சீர்குலைத்து விட்டதென்றும், நமது மாணவர்களுக்குப் பூர்வீகக் கல்வியைப் புகட்ட வழிதேடவேண்டுமென்றும் இலவசக் கட்டாயக் கல்வியொன்றினால்தான், கல்வி அபிவிர்த்தியாகுமென்றும், அஃதில்லாமல் சகலத்திலுள்ள ஜாதியார்களுக்குச் சமதையாய் இந்தியர் வரமுடியாதென்றும், புஸ்தகசாலை இயக்கமில்லாமல், பிரதம கல்விமட்டும் அபிவிர்த்தியடைவது உபயோகமில்லையென்றும், சன்மார்க்கத்தில் பயில, புராணபடனங்களும் ஹரிகதைகளும், திவ்யநாம சங்கீர்த்தனங்களும் மாஜிக் லாந்தல் முதலியது தற்கால முறைகளுடன் விவேகமாகச் சேர்க்கப்படவேண்டுமென்றும் ஒவ்வொரு கிராமத்திலும் தேசபாஷைப் புஸ்தகங்களடங்கிய புஸ்தகசாலைகளும் பிரயாணஞ்செய்யும் புஸ்தகசாலைகளும் ஏற்பட்டு அவைகளை நிர்வகிக்கக் கிராமாக்

திர உபாத்யாயர்கள் பயிற்சி செய்விக்கப்பட்டு வேதனம்பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இவ்விஷயங்களுக்கு ஸர்க்கார் தாராளமாய்ப் பணவுதவிசெய்யவேண்டியதத்யாவஸ்யமென்றும், சரஸ்வதிதேவியின் வேலையை ஒருவரும் நடைப்படுத்தமுடியாததலால் அக்காரியம் முன்போலவே நன்கு நடைபெறப்பட்டு ஜனங்கள் சௌக்கியமடையட்டுமென்றும் எடுத்துரைத்தார்கள். பின்னர் மகா-௱-௱-ஸ்ரீ M. R. இராமசாமிஐயரவர்கள் "தமிழ்ப்பாஷையும், புஸ்தகசாலைகளும்" என்ற விஷயத்தைப்பற்றி வெகு நன்றாக எழுதிவந்திருந்த வியாஸத்தைப் படித்தார்கள். மகாநாட்டிற் படிக்கப்படவேண்டுமென்று ஆந்தரதேச புஸ்தகசாலைச் சங்கத்தின் அக்ராசனாதிபதியவர்கள் எழுதியனுப்பிய "கிராமாந்திரங்களில் மூற்கால வாழ்க்கையைப் புஸ்தகசாலைமூலமாய் ஏற்படுத்தும் விதம்," என்ற வியாஸம் ஆங்கிலத்தில் படிக்கப்பட்டதன்மேல், சிற்றுண்டி உண்ட பின்னர் அடியிற்கண்ட 15-தீர்மானங்கள் வ்யவகரிக்கப்பட்டு நிறைவேறின. அஃது பின்வருமாறு:—

தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

1. சென்ற கொடிய யுத்தத்தில் நேசக்கக்ஷியார்களுக்கு ஒப்பிலாவெற்றியை அளித்துப் பொதுப்படையாய் உலகத்துக்கும் முக்கியமாய் இந்தியாவுக்கும் சமாதானத்தைக்கொடுத்து மேன்மேலும் இந்தியர்கள் சுபிக்ஷமடையும்படி கருணைபுரிந்த ஸர்வேசுவரனுக்கு இச்சபை வந்தனமளிக்கின்றது.

2. ஆலங்குடியில் நடந்தேறிய முதற்சபையில் தீர்மானித்த விஷயங்களின்பேரில் மிக்க கருணைகூர்ந்து உத்தரவு பிறப்பித்ததற்காக ௱-தர்பாரவர்களுக்கு இச்சபை முழுமனதுடன் வந்தனமளிக்கின்றது.

3. பிரதம கல்வியைக் கட்டாயப்படுத்துவதால் விளையக்கூடிய பயனை ஐயந்திரிபற உணக்கத் தாலூக்காக்களிலும் பிரதான பட்டணமாகிய புதுக்கோட்டையிலுமாவது அங்ஙனம் செய்யவேண்டி ௱-தர்பாரவர்களை இச்சபை வேண்டுகின்றது.

4. தர்பாரவர்களால் கொடுக்கப்படும் திரவியசகாயம் பொதுப் புத்தகசாலை, வாசகசாலைகளுக்குக் குறைந்தது முறையே ரூ 20, 10-ம் ரூ 100, 50-க்கு மேற்படாமலும், அவைகளால் நன்கொடை சந்தா, இவைகள் மூலமாய் சேர்க்கப்படும் தொகைக்கு திரவியசகா

யம் குறையாமல் ஸாங்கிஷன் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

5. நடு வாசக புஸ்தகசாலை அதைச்சேர்ந்த சுற்றுப்பிரயாண புஸ்தகசாலைகளை ஸ்தாபிக்கவேண்டியதைப்பற்றி அடியிற்கண்ட பிரேரேபணைகளை ரா-தர்பார் அவர்கள் ஆலோசனைக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கிறார்கள்.

(a) ஸ்கூல் ஸூபரின்டென்டென்டு ஆபீஸில்வைத்தால் வெகு ஜனங்களுக்குப்பயன்படாததால் நடுவாசக புஸ்தகசாலையைப் பிரத்தியேகமான கட்டடத்தில் வைக்கவேண்டியது.

(b) நடுவாசக புஸ்தகசாலைக் கவனிப்பு வேலையை நடத்த ஒரு வேலைதெரிந்தவரை நியமித்துச் சர்க்கார பற்று உள்ளவர்களும் இல்லாதவர்களும் சேர்ந்த கமிட்டியார் மேல் பார்வையில் வேலைபார்க்கச்சொல்லவேண்டியது.

(c) டவுன் மகாஜனங்களுக்கும் உள்நாட்டுப்புற ஜனங்களுக்கும் முறையே உபயோகமான நடுப்புஸ்தகசாலை சுற்றுப்பிரயாண புஸ்தகசாலைகளுக்கு வேண்டிய புஸ்தகங்களை வாங்குவதற்கு ரா-தர்பார் அவர்கள் அளித்த ரூ 500 போதாததால் ரூ 5,000 சாங்கிஷனாக வேண்டியதாய்க் கோரப்படுகிறது.

(d) வித்தியா இலாகா உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு ஏற்கனவே இருக்கும் வேலைகளோடுகூட இவையும்நடத்த இயலாததால், பிரத்தியேகமான இதே அலுவலாக வேலைசெய்யக்கூடிய ஒரு சிப்பந்தியை புஸ்தகசாலை பராமர்ஷராய் நியமித்து அவரை மாயக்கண்ணாடிப்படங்களின் உதவியைக்கொண்டு பிரசங்கங்களும் காக்ஷிகளும் நிரூபணங்களும் நடத்த ஏற்பாடு செய்யவேண்டியது.

6. ரா-தர்பார் அவர்கள் ஆலோசனையிலிருக்கும் பெண்கள் உபயோகார்த்தமான புஸ்தகசாலைகளைச் சீக்கிரம் ஏற்படுத்தவேணுமாய் இம்மகாநாடு பிரார்த்திக்கிறது.

7. மாயக்கண்ணாடிப்படங்களில்லாமல் நாட்டுப்புறத்தார்களுக்கு எவ்வித பயனுள்ள போதனை கற்பிக்க முடியாததாலும், அவைகள் கிடைத்தால் அவைகளைக்கொண்டு ஒவ்வொரு தாலூகா கஸ்பாவைச்சுற்றி 5 மைல் உள்ள கிராமங்களுக்கு நல்ல உபயோகமான கல்வி போதிக்கக்கூடியதாலும் ரா-தர்பாரவர்கள் தயவு கூர்ந்து தனி

யாக இந்த வாசகசாலைகளுக்கு என்றே அவர்களுக்கு ஒரு மாயக் கண்ணாடி வாங்கிக்கொடுக்கக் கோரப்படுகிறது.

8. பொது ஜனங்களின் அறிவு விருத்திக்காக இச்சமஸ்தான கெஜெட்டின் காபிகளைப் பூராவாகவும், சமஸ்தானத்து ராஜநிர்வாக ரிபோர்ட்டுகளையும். சமஸ்தானத்து விருத்தாந்தங்களை விளக்கிக் காட்டும் மான்யூலின் பிரதிகளையும், இன்னும் சர்க்கார் அச்சுக்கூடத்தில் பிரசுரிக்கப்படும் ஏனைய உபயோகமான புஸ்தகங்களுக்கும் பிரதிகளை விலையன்றி இச்சங்கங்களுக்குக் கொடுக்கக் கோரப்படுகிறது.

9. இவ்வித வாசக புஸ்தகசாலைகளை அமைப்பதற்குத் தக்க இடங்களில் ஆலயங்கள் கட்டவும், அவ்வாலயங்களில் வேண்டிய சாமான்கள் இதரபொருள்களைவாங்கவும் மைசூர், பரோடா ராஜாங்கத்தார் செய்வதுபோல நமது ராஜாங்கத்தாரும் ஒப்புக்கொண்டு தங்கள் செலவிலே மேற்படி காரியங்களைச் சீக்கிரத்தில் நடத்த வேண்டப்படுகிறது.

இச்சமஸ்தான கிராண்டு விதி 20-நம்பர் படி கிடைக்கக்கூடிய உதவித்தொகை சொல்பமானதால் வாங்குபவர்கள் அதைக்கொண்டு மேற்படி காரியங்களைத் தாங்களே நடத்தமுடியாது.

10. இச்சமஸ்தானப் பிரதிநிதிசபைக்கு இம்மகாநாட்டாரால் தெரிந்தெடுக்கப்படும் 2 பேர்களை ா-தர்பார் அவர்கள் அங்கத்தின ராக நியமிக்க இயலாது செய்தஉத்தரவை புனராலோசனை செய்து ரத்துசெய்யப் பிரார்த்திக்கப்படுகிறது.

11. மைசூர், பரோடா சமஸ்தானங்களுக்குப் போய் அங்கே இவ்வாசக புஸ்தகசாலைகளை நடத்தும் விபரம், விமரிசை [illegible] கொள்ளாதவரை ஒழுங்கான ஏற்பாடுக[illegible] என்று தோற்றுகிறபடியால், அவ்வாறே மேற்படி சமஸ்தானங்க ளுக்குப் போய் பார்த்துவர ஒரு லாயக்கான பேர்வழி[illegible] ா-தர்பாரர் அவர்களை மறுபடியும்வேண்டி முன்போட்ட உத்தர வை ரத்துசெய்யக் கோரப்படுகிறது.

12. இந்த வாசக புஸ்தகசாலை நடத்தும்வேலை நன்கு தெரிந்துவர பரோடா ஸமஸ்தானத்திற்கு இரண்டு சிறுவர்களையனுப்பவும், அவர்களை அனுப்பும்போது வேலை கற்று திரும்பினபிறகு இத்தனை வருடங்களுக்கு சர்க்கார் சொல்லுகிற திட்டத்திற்கு உட்பட்டு

வேலைசெய்யவேண்டியதென்கிற நிபந்தனைக்கு உட்படுத்தி அனுப்பும்படிக்கும் வேண்டப்படுகிறது.

13. முன்னடந்த பிரகாரம் வித்தியா, தொழில், விவசாயக் காட்சிகளை வருடந்தோறும் மறுபடியும் நடத்தப் பிரார்த்திக்கப்படுகிறது.

14. தலைமையான வாசகபுஸ்தகசாலைக் கமிட்டியால் அதற்கு இணைக்கப்பட்ட உள்நாட்டு வாசகபுஸ்தகச் சங்கத்தார்கள் செய்யும் வேலையை அவ்போது அப்போது மேல்விசாரணை செய்ய அதிகாரம் கொடுக்கவேண்டியது என்றும் அதன்விஷயமான வேலைக்குவேண்டிய சாதகங்களை உள்நாட்டுச் சங்கத்தார்கள் செய்யவேண்டியதென்றும் தீர்மானிக்கப்படுகிறது.

15. ஸர்க்கார் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரியிலும் சன்மார்க்க மதப்படிப்பு சொல்லிக்கொடுக்க ஏற்பாடுசெய்யவேணுமாய் ஈ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கிறது.

(Sd.) K. S. இராமசாமி சாஸ்திரி,
அக்கிராசனாதிபதி.

(True copy.)

A. S. முத்துக்கிருஷ்ணன்,
உதவிக்காரியதரிசி.

ஒவ்வொரு தீர்மானத்தினிறுதியிலும் அக்கிராசனாதிபதியவர்கள் ராமாயணம், பாகவதம், கீதை முதலியவற்றிலிருந்து உதாரணங்கள் சமயோசிதமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார்கள். பிற்பாடு புகைப்படமெடுக்கப்பட்டது.

6. அக்கிராசனாதிபதியவர்கள் மகாநாடு நன்கு நடைபெற்றதென்றும் ஆக்மலாபமடையவேண்டிய விஷயத்தைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்தும் இரவு 9-மணிக்கு முடிவுரைகூற, அக்கிராசனாதிபதியவர்களுக்குப் பூமாலைசூட்டி வந்தனோபசாரம் சொல்லப்பட்டது. மறு வருடம் மகாநாடு நடத்தப்பட ஒருவரையும் அழைக்க அச்சமயம் முடியவில்லையானதினால், ஆலங்குடியிலேயே நடத்த அழைக்கப்பட்டது. மகா-௱-௱-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கும் சக்கரவர்த்தி அவர்களுக்கும் வாழ்த்துக்கூறியவுடன் சபை கலைந்தது. பிற்பாடு திருமயம் "ஸ்ரீ மார்க்கண்ட சபை" ஆதரவில் மகாநாட்டை மறு வருஷம் நடத்துவதாக ஒப்புக்கொண்டு காரியதரிசியினிடமிருந்து விருப்பம் வந்திருப்பதால் அங்கு நடைபெறும்.

ஆலங்குடி.
20—5—19.

A. S. முத்துக்கிருஷ்ணன்,
உதவிக்காரியதரிசி,